KALANILAYAM

தனிப்பிரதி விலை அணா மூன்று.

# கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா

உள் நாடு ரூ. 7 8 0

புற நாடு ரூ. 9 8 0

காரியாலயம்:—

வேளாளர் தெரு,

புரசைபாக்கம், சென்னை

Vol 5.] 1932 ௵ செப்டம்பர் ௴ 22௳ [No. 37

## பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 721
2. ஷெல்லி—(மேகம்). P. C. ஜயவேலு 723
3. நம்மாழ்வார் வைபவம் (3-ம் பத்து, 8-ம் தசகம்) K. இராஜகோபாலாச்சாரியார் B.A., B.L., 725
4. தமிழ்ப்பாடம் நளவெண்பா - கலிதொடர்காண்டம் 726
5. திருக்குறள் நீதி (இல்லறவியல்) A. இராமலிங்கம் 728
6. ஜூலியஸ் ஸீஸர் (அங்கம் 4. களம் 3.) ஷேக்ஸ்பியர் நாடகம் 729
7. பொதிகைநிகண்டு (பலபொருட் பெயர்த்தொகுதி) S. வையாபுரிப் பிள்ளை B.A. B.L. 732
8. அப்பர் (64 கலைகள்—தர்க்கம்) E. N. தணிகாசல முதலியார் B.A. B.L. 734
9. கம்பராமாயணம் (மாரீசன் வதைப்படலம்) T. N. சேஷாசலம். B.A. B.L. 735
10. வர்த்தமானம் 739

## கலாநிலயம்

### விருப்பமும் கருவியும் 12.

எனின், விரும்பப்படுவது யாதென்றெண்ணுங் கருத்தின்றியே வீணிற்குச் சிலவற்றை வேண்டுமென்றும் வேண்டாவென்றும் இகல்வதனிலும் இழுக்கு மற்றெதனிலும் காண்டலரிது. செயப்படுபொருள் யாதென்று தேர்ந்தபின் னன்றோ அதற்கிது கருவியாய் அமையுமோ அமையாதோ வென்று ஆராய்வதற் கியலும்? இத்துணை எளியவோர் செய்தி தன்னைத் தெரிவித்துக்கொள்ளாமல் கரந்திருக்கின்ற கைதவம் என்னையோவெனின், அன்னதற் குரிய காரணம், பண்படா மாநுட இயற்கையின் ஆழத்தில் கிடந்துறைந்திருக்கின்றது. இதனைத் திருவள்ளுவர்,

சிறியா ருணர்ச்சியு ளில்லைப் பெரியாரைப்
பேணிக்கொள் வேமென்னு நோக்கு

என்னுங் குறளில் இணையிலா நுணுக்கமுடன் எடுத்துக் காட்டியிருக்கின்றனர். நம் நாட்டிலும் மேனாடுகளிலும் தத்துவவுணர்வுடைய வித்தகர்கள் வாழ்க்கை முறையினைவகுத்துரைத்தமொழிகளைப் பேணிகொள்வதற்கு அஞ்சி, தம்முடைய அறியாமையைத் தாமே அறிந்துகொள்ளும் வகையற்று உழல்கின்ற தம்போன்ற சிற்றினத்தையே சுற்றமாய்ச் சூழ்ந்துகொள்கின்ற பரிபவம் எந்நாளிலும் இந்நாள் மிகவும் அதிகமாய் மக்களைப் பற்றிக்கொண்டிருக்கின்றது. பெரியோரைப் பார்க்கப் பார்க்கச் சிறியோர்க்குத் தம் சிறுமை அதிகமாய்த் தோன்றததலைப்படுமாதலால், அத்தகைய தோற்றத்தைக் காண நாணி, தம் சிறுமைநினைவை மற்றைய சிற்றினத்தவர் இடையே மூழ்கி மறக்கமுயல்கின்றவோர் அற்பச் சூழ்ச்சியால் இந்நிலைமை நேர்கின்றதென்பதற்கு அவரவர் நெஞ்சமே நல்குங் கரி. காரணம் யாவதாயினும் ஆகுக. பெரியோர், வாழ்க்கைக்கோர் குறிக்கோளாய விருப்பத்திற்கு வித்திடுவார்; சிறியோர் ஆசைகாட்டி ஆரவாரஞ்செய்வர். விருப்பமும் ஆசையும் ஒருபொருளனவேனும் இந்தக் கட்டுரையின்பொருட்டு அவ்விருசொற்களைச் சிறிதுவேறுபடக் கருதவேண்டும்.

ஒருவன் பணத்திற்கு ஆசைப்படுகின்றான். ஆயினும் அவன் விரும்புவது பணமே யல்லாமல் அப்பணத்தினின்றும் வேறாயதொன்றாகும். பணத்தால் தான் துய்க்கலாம் என்று அவன் கருதுகின்றவைகளன்றோ அவனது விருப்பம் என்பதற்குரியன. அவைதாம் இன்னஇன்னவைகளென்று தெளிவடைந்து தோன்றலாம், அல்லது தெளிவின்றிக் குழம்பிக்கிடக்கலாம். அது எவ்வாறாயினும், ஆசைப்படும் பணமானது ஒரு கருவியின் அளவேயாய் அவன் கருத்தில் நிகழவேண்டும். இவ்வாறன்றி அவ்வாசையே ஒருவனுக்கு விருப்பமுமாய் முடிந்ததாயின் அவனைத்தான் வச்சையன் என்றும் உலோபியென்றும் கருமியென்றும் இகழ்கின்றோம். கருவிக் கவாவும் ஆர்வத்திடையே விருப்பத்தை மறந்திழந்த மதியிலி அவன். அரசியலமைப்பு, சமூகச் சீதிருத்தம், கைத்தொழில் வர்த்தக வளர்ச்சி முதலிய முயற்சிகளின்பால் வைத்த ஆர்வம் அத்தனையும் இத்தகைய ஆபத்தைத் தன்னுள் அடக்கிக்கொண்டிருக்கின்றது. ஆதலின், ஆசையையே விருப்பமென அலமராமல், மேற்கொண்ட முயற்சியால் முற்றவேண்டிய விருப்பம் யாதென வேறுபடுத்தி உணரப் பயிலாக்கால் ஊதியம் ஒன்றுமில்லை. விருப்பத்துடன் அதற்குரிய கருவியை மயங்கலாகாது. இதற்கு,

கருவியைத் தேடுமுன் விருப்பத்தைத் தேர்ந்துகொள்வது அறிவுடைமைக் கடையாளமாவதுமன்றி அவசியமுமாகின்றது. இதன்படி ஒவ்வொருவரும் புரியவேண்டிய மிகக்கடிய சடங்கொன்று உளது. அதனை முடிக்கும் வரையில் அப்பாற்செல்ல வழியில்லை.

தனக்கென வாழ்பவராயினும் ஆகுக, பிறர்க்கென முயல்பவராயினும் ஆகுக; யாவரேயாயினும் ஒவ்வொருவரும் சிறிதுநேரமேனும் ஓரிடத்தில் உட்கார்ந்து, முதலில் தான் ஆசைப்படுவதை, முன் வகுத்துக்காட்டியபடி, விருப்பத்தினின்று வேறுபிரித்து விலக்கிவிட்டு, அதன்பின், “நான் எய்தற்கு விரும்புவது யாது, அல்லது, எய்துவித்தற்கு விரும்புவது யாது” என்பதைச் செவ்விய ஒரு வாக்கியத்தில் தெளிவுபெற அமைத்துச் செப்பிக்கொள்ள வேண்டும். அப்பொழுது, பாமரர்களென்றும் பொதுஜனங்கள் என்றும் அழைக்கப்படுபவர் கிடக்க, கற்றவர்களென்றும் மற்றபல வகைகளிற் சிறப்புடையவர்களென்றும் கருதப்படுவர்களில் பதினாயிரத்திலொருவருக்குங்கூட இவ்வாக்கியம் அமைவது இயலாததாகி மயங்குகின்ற காட்சியைக் காணலாம். மற்று, ‘இன்பம் அடையவேண்டுமென்பது என்னுடைய விருப்பம்” என்று கூறியவளவில் இவ்வாக்கியத்தைச் சாதித்துவிட்டதாக எண்ணிக்கொள்வதில் யாதும் பயனில்லை. வினாவையே இரந்துநிற்கும் விடையிது. எதனையோ இவன் இன்பமாக விரும்புகின்றான் என்பதையும் எடுத்துரைத்தல் இந்த விடையின் நேர்மைக்கு இன்றியமையாதது. இன்பங்கள் எனக் கருதப்படுவன பல உண்மையில் துன்பங்களே ஆகுந்தன்மை வெளிப்படை. மற்று, மாரிஸ் மேடர்லிங்க் என்பவர், “நண்ப, நீ துன்பங்களாக வருந்தியன பல வாய்மையில் இன்பங்களே என்பதை அறியவல்லையோ” என வினவுவார். ஆதலின், “இன்பம் எய்தற்கேனும் எய்துவித்தற்கேனும் விரும்புகின்றேன்” என்றுமாத்திரம் சொல்லிநிற்பது ஒன்றுஞ் சொல்லாமல் வாளா இருப்பதற்கே நேர். இதுவுமன்றி, “இயேசுகிறிஸ்துவே, முள்முடிக்கும் கசையடிக்கும் இலக்காகிக் கழுமரம் ஏறினாரென்றால், ஏ, வெறுமானிட, இன்பம் நீ அடையவேண்டுமென் றின்றகேட்பதற்கு உனக்கோர் வாயுளதோ” என்று கடிந்துரைக்கின்றார் தாமஸ் கார்லைல். உலகஅறிவின் உண்மைக் குவடுகளனைய இன்னோர் கருத்துக்களை நெஞ்சத்திருத்தாமல் பற்பல இயம்பிப் பற்பல இயங்கித் திரிதலிற் பயனில்லை.—முத்திக்கு விரும்பி முயல்வார் திறம் வேறுவிடயம்; அதனைப்பற்றி நாமொன்று மிங்குப் பேசவில்லை என்பதை எடுத்துரைத்தல் மிகை. முழுமுதற் கடவுளின் அருட்பெரும் வெள்ளமே பருகவேண்டுமென்று விழைகின்ற விழுமியோர் திறத்தினைப் பற்றியும் இக்கட்டுரை ஆராயக்கருதியதில்லை. யாதும் மனதற்ற பரிசுத்தநிலையினை விரும்புகின்ற பெரியார் பெற்றியும் அன்னதேயாம்.

இப்பொருள் இப்பெயர் இம்முறை இந்நிலை இவ்வரசு இச்சட்டம் இதுஇது வேண்டுமென்று தொடர்கின்ற ஆசைக்கயலாகியும் இன்னவைகளால் அடைதற்குரிய வேறொன்றுமாய் நிற்கின்றவோர் விருப்பம் என்னவென்று இலக்கணங் காணமாட்டாமையே பெரும்பாலும் மாந்தர்தம் தன்மையாவதைத் தேர்ந்துகொள்வதற்குதவவல்ல இச் சோதனையைத்தான் ஒவ்வொருவரும் முதலில் முடிக்கவேண்டிய சடங்கென்று முன்னர்க் குறிக்கலுற்றோம். அவ் வாராய்ச்சியிற் றானே அவாக்களத்தனையும் அற்றுவிடாவெனினும், வேறேயொரு விருப்பம் இருத்தல்வேண்டும் என்னும் அவசியத்திற்கேனும் அது வழிதிறந்துவைக்கும் என்பதில் ஐயமில்லை. அவ்விருப்பந்தான் இன்பமெனுஞ் சொற்கொண்டு உருப்பெறத்தலைப்படுங்காலையில், அவ்வின்பமென்பதன் இலக்கணமும் வரையறுக்க அரியதாகவே, வேறென்னுளதோ விரும்புதற்கென்று நம்மனம் வினவாமற் றீராது.

ஒன்றேயிருக்கின்றது ஒருவன் விரும்பற் குரியது. அதுதான் எதுவோவெனில் நல்லவனாயிருக்கவேண்டுமென்பதே. தான் நல்லவனாயிருப்பதற்கும் தன்னாலியன்றவரையில் மற்றவரை நல்லவராக்குதற்கும் மிக விரும்பி முயல்வதல்லால் மனிதன் இவ்வுலகில் விரும்பத் தகுவது வேறொன்றுமில்லை. நல்லவராயிருந்தால் இன்பம் பெறலாம் என்று வாக்கியத்தைத் தொடர்த்திவிட்டால் அதன்பெருமை அவ்வளவும் போயிற்று. நல்லவர்கள் இன்பம் அடைகின்றாரென்ற நியதியில்லை, இருத்தலும் இயலாது. தமக்குரிய துயரங்களன்றியேயும் பிறர்படுந் துயரைக்காண நல்லவர் அடையுந் துன்பம் மிகப் பெரியதாதலின் ஏனையோரைக்காட்டிலும் இவ்வுலகில் நல்லவர்க்கே துன்பம் அதிகமென அறைதற்கு உரியதாகின்றது. எல்லாரும் எங்கும் இன்புற்று இருக்கவேண்டும் என்னும் எண்ணங்கொண்ட ஒருவன் நல்லோரினத்தைச் சேர்ந்தவன் என்பதேயல்லால் அது வேறொன்றையுங் காட்டவில்லை.

இனி நல்லவன் எனத் தகுமவன் யாரென்ற இலக்கணத்தைச் சான்றோர் மொழிகொண்டு மிக எளிதில் நினைவுபடுத்திக்கொள்ளலாம். திங்களைப்போல் தங்குறை தீர்வுள்ளார் தளர்ந்து பிறர்க்குறாஉம் வெங்குறை தீர்ப்பவர் நல்லவர்; கதலியின் கன்றுபோல், எந்தை நல்கூர்ந்தான் இரப்பார்க் கொன்று ஈந்தென்று தம்மீகை மறுக்காதார் நல்லவர்; அகழ்வாரைத் தாங்கும் நிலம்போல் தம்மை இகழ்வாரைக் காப்போர் நல்லவர். குறைக்குந்தனையுங் குளிர்நிழலைத் தந்து மறைக்கும் மரம்போல் தீதுசெய்வோர்க்கும் தண்ணளி புரிவோர் நல்லவர். ஒரு கன்னத்திலறைவோர்க்கு மறு கன்னங் காட்டுமவர் நல்லவர். பெயக்கண்டும் நஞ்சுண்டமைபவர் நல்லவர் நல்லவர்.

ஒருவன் நல்லவன் ஆதற்கேனும் இருத்தற்கேனும் புறத்திருந்து இடையூறு செய்யவல்லது இவ்வுலகின்கண் ஒன்றுமேயில்லை, என்பதை உணர்வது அருமையன்று. வறுமை, பிணி, ஆட்சிமுறை, மொழி வேற்றுமை, சாதி சமய ஆசார வேற்றுமைகள், பழைய வழக்கங்கள், புதியவழக்கங்கள், ஆள்வோர் கொடுமை, அயலான்கயமை, தீண்டுதல் தீண்டாமை, இன்னவைபனைய யாவும் ஆழ்ந்து நோக்குங்கால் நாம் நல்லவராயிருக்கக் கூடாதபடி எவ்வகையில் இடையூறாகக்கூடுமென்று வீண்வம்பிற் கொன்று சொல்லவேண்டுமென்று முயன்றாலும் முடியாமை புலப்படும். நல்லவனாவதொன்றே விரும்புதற்குரியதும் விரும்பக்கூடியது மாயபின் வேறு இவைகளைப்பற்றி எள்ளளவுங் கருதவேண்டா. முன்னுரைத்த இலக்கணத்தின்படி மனிதன் நல்லவனாயினால் இவைகளனைத்தும் தாமே நல்லவைகளாய்த் திருந்திவிடும் என்னும் உறுதியை ரால்ப் வால்டோ எமர்ஸன் என்பவர் தக்க காரணங்களுடன் எடுத்துக் காட்டியிருக்கின்றார். “நல்லவனாவதல்லால் நினக்குரிய

நினைவு வேறென்று இருப்பதெல்லாம் வீணை கேட்டிற்கே வித்து'' என ஆங்கிலசிந்தனையாளர்களில்ஒருவராய ராபர்ட் லூயி ஸ்டீபன்ஸன் சாற்றுகின்றார். நல்லவராதலே,விருப்பமாகவலதெனத் துணிந்தபின் அந்நிலையை எய்தற்குரிய கருவியாதெனக்கேட்பது முறை. "நல்லவன் நீ ஆகு ஆகு'' என்று ஆயிரம்ஆயிரந் தரம் தனக்குச் சொல்லிக்கொள்வதாலும் பிறர்க்குச் சொல்லித்தருவதாலும் சிறிதேனும் பயனில்லை. பிணியறிந்து மருந்துதவாமல், "நீ இந்நோய்தீர்ந் தெழுந்திரு எழுந்திரு'' என்றோர்மருத்துவன் முறையிடுவதற் கொப்பாமிது. பயிற்சியொன்றும் செய்துசெய்து முதிராமலே 'மோடார்க்காரை'நிறுத்தப்புகும் மதியையன்றோ இது ஒக்கும். உடலைப் பற்றியதற்கே இத்துணை முயற்சியும் பயிற்சியும் வேண்டுமெனின், மனதைப்பற்றிய நன்னிலைக்குப் பின்னும் எத்துணைப்பயிற்சி வேண்டுமென்பதுசிந்தித்தவுடன் தெரிந்துகொள்ளக்கூடியதொன்றாயினும் அதனைச் சிந்திப்பவரைத்தான் காண்பது அரிதாகிவிட்டது. தாம் தாம் நல்லவராகவேனும் பிறரை நல்லவராக்கவேனும் முயல்பவர், மனதானது பண்படுதற்கேற்றவகை யாதென்பதைத்தேர்ந்து கைக்கொள்ள வேண்டாவோ. எமானுயல் கான்ட் என்னுந் தத்வஞர் முடிவும் இதுவே.

மானுட மனதைச் செவ்விதின் பண்படுத்தி நன்மையின்பால் இனிதுய்க்குந் திறம் கலைகளுக்கே யன்றி வேறொன் றிற்கும் இல்லை என்பது திண்ணம். கலைஎன்பது இன்ன தென்பதும் நன்மையின்பால் அது எவ்வண்ணம் உய்க்கின்ற ஆற்றல் உடையதாகின்றதென்பதும் இக் கலாநிலய இதழ்களில் பல்வேறு வகைகளில் ஆதாரங்களுடன் ஆராயப்பட்டிருக்கின்றன. ஆதலின் இங்கு அவைகளை மீண்டும் இயம்பவேண்டா. எனினும் எதிர்மறையாய் ஒன்றினைமாத்திரம் இவ்வயின் நினைவூட்டி வற்புறுத்தல் நலம். 'கல்வி, கல்வி' என்று இக்காலம் கழறப்பெறுவனவற்றை எல்லாம் கலை என மயங்கி, நூற்றுக்குநூறுபேரைத் தற்காலக்கலாசாலைச் சுவர்களுக்குள் சேர்த்துவிட்டால் அவ்வளவில் எல்லோரும் நல்லவர்கள் ஆவாரென்று யாம் உரைக்கின்றோம் என்று எவரும் இங்கு எண்ணிவிட வேண்டா. விஞ்ஞானம் என்றும் இரஸாயனம் என்றும் பொருளாதாயம் என்றும் பேர்கொண்ட நூல்களின் படிப்பொன்றும் கலைப்பயிற்சி என்னும்பெயரிற் கேற்றவைகளாவதில்லை. மொழி நூல்களையும் கல்வெட்டுக் குவியல்களையும் இவையனைய பிறவற்றையும் கல்லாதவர்களே பெரும்பாலும் நல்லவர்கள் நல்லவர்கள். அழகெனுந் தத்துவத்தை இசையாலும் அசைவாலும் மொழியாலும் உருவாலும் அமைத்துக் காட்டுகின்றவைகளே கலைகள். அவ்வழகின் மறுபெயராய மெய்ம்மையை ஆராய்ந்துரைக்கும் வித்தகர்தம் (Philosophers) மொழிகளும் நன்மையில் நிலைநிறுத்தற் குதவவல்லன. எனினும் கலையுணர்வினால் பண்படா வொருவனுக்குவித்தகர் சொற்களும் விபரீதம் விளைக்கலாம். உயரிய கலைஞர் கற்பனை செய்துள 'பொய்'களிற் பதமடைந்தாலன்றி ஏனையோர் இயம்பும் மெய்ம்மையால் ஒருவனும் உய்யமாட்டான்.—இது சரதம்.

இன்னுமொன்று; இதனுடன் இங்கு இவ்வரிசைக் கட்டுரைகளை முடிக்கின்றோம். நல்லவ னாதற்கும் ஆக்குவித்தற்கும் கலைகளே துணையாக முயல்வாரெல்லாரும் வெற்றியுடன் தம் விருப்பத்தை முற்றுவிப்பாரோ என்னும் ஓர் ஐயமும் அதனால் விளையும் அயர்வும் ஒருவரும் எய்தவேண்டியதில்லை. சிலர் சிலவற்றில் தவறலாம், தோற்கவுந் தோற்கலாம். இவ்வளவு உயரிய நோக்கமுடையவர் தவறியதும் தோற்றதும் போக எஞ்சியதுகொண்டே நன்மதிப்பிற் குரியவர்களாவார், திண்ணம். அதுவுமன்றி, "என் நாமத்தால், அன்ப, நீ செயற்கரிய நன்மையினைச் செய்ய முயல். தோற்றாயேல், நன்று, பின் அந்தத் தோல்வியையே யானுகக்கும் கையுறையாய்க் கொணர்க'' என்றுதனிப் பெருங் கருணைவள்ளல் எம்பெருமான் நம்மனோர்க்கு நல்கியுள நன்மொழியை மறக்கலாமோ.

# ஷெல்லி

[708-வது பக்கத் தொடர்ச்சி]

## மேகம்

தாகத்தால் தளர்ந்திருக்கும் மலர்களுக்கு நான் கடல்களிலிருந்தும், ஆறுகளிலிருந்தும், புதிய நீர்த்திவலைகளைக் கொண்டுவருகின்றேன். இலைகளுந் தளிர்களும் நண்பகற் கனவினில் ஆழ்ந்திருக்கும்போது நான் அவைகளுக்கு மெல்லிய நிழல் தருகின்றேன். எனது இறக்கைகளிலிருந்து பனித்துளிகள் கீழே சிதறிவிழுகின்றன. இரவின்கண் இனிதமர்ந்த துயில் நின்று அரும்புகளை இந் நீர்த்திவலைகள் எழுப்புகின்றன. சூரியனைச்சுற்றி நடனமாடி வருகின்ற இப்பூமி பூஞ்செடிகளாகிய தன் பச்சிளங்குழவிகளை மெல்ல அசைத்துத் தாலாட்டுகின்றாள். நான் பூமியின்மேல் வீசும் என் மழைத்தாரையைச் சாட்டையைப்போலும் சவுக்கைப்போலும் உபயோகிக்கின்றேன். இதனால், நான் கீழே கிடக்கின்ற பசுநெடுந் தரைவெளிகளில் தண்ணீர் நிரப்பி வெண்மைப் படுத்துகிறேன். நான் இடியுடன் போகும்போது உரக்கச் சிரிக்கிறேன்.

நான், பூமியின்மேல் மிகவுயர்ந்து வளர்ந்துள்ளமலைகளின்மீது உறைந்துள்ள பனிக்கட்டியைச் சரிக்கவும், அம்மலைகளில் அடர்ந்திருக்கின்ற தேக்கு முதலிய வலிய மரங்கள், அப் பனிப்பாறைகளின் பாரத்தைத் தாங்கமாட்டாது பயந்து நடுக்கி வீறிட்டுக் கதறுகின்றன. இரவுமுழுவதும் வெண்மையான எனது மெல்லணையில்தலைவைத்து,வன்னெடுங்காற்றின் கரங்களில் உறங்குகின்றேன். ஆகாயத்திலுள்ளஎனதுகோட்டை கொத்தளங்களில் இணையிலாப் பொலிவுடன் எனது மாலுமியான மின்னல் வீற்றிருக்கின்றான். அவனுக்குக் கீழே இருக்கின்ற ஒரு குகையில் சிறையடைப்பட்டுள இடியானது வெளிவரை உழைத்து அடிக்கடி குமுறுகின்றது. பூமியின்மேலும், சமுத்திரத்தின் மேலும் இனிய விதமாய் இந்த மாலுமி என்னைச் செலுத்துகிறான். கலப்புநிறம் பொருந்திய ஆழியின் ஆழங்களில் உலாவுகின்ற கடல்மடந்தையர்பால் என் மாலுமி காதல்கொண்டு, அவர்களது மாயவலையி லகப்

பட்டு, காந்தமிழுத்த இரும்புபோலாகின்றாள். இம்மாருமி என்னைப் பள்ளத்தாக்குகள், கணவாய்கள், மலையுச்சிகள், குன்றுகள் முதலியவைகளின்மேல் மெல்ல மெல்லச் செலுத்துகின்றான். இம்மாருமி மலைகளின் மீதும் ஆறுகளின்மீதும் பிரயாணஞ் செய்யும்போது புதிய புதிய கனுக்கள் கண்டுகொண்டே செல்லுகின்றான். அவன் எங்கே பிரயாணஞ் செய்துகொண்டிருந்தபோதிலும், அவன் எந்தக் கந்தர்வகன்னிகையைக் காதலித்துக்கொண்டிருக்கிறானே, அந்தக் கன்னிகை, அவ்வவ் விடங்களில் இனிது தங்கி இருக்கின்றாள். அக்காலங்களிலெல்லாம், நான் ஆகாயத்தின் நீலனிறப் புன்சிரிப்பில் குளிக்கின்றேன். அப்போது, இம்மாருமி என்னை மழையாகப் பூமியிற் பொழிவிக்கின்றான்.

குருதிநிறத் திளங்கதிரோன் வால்நக்ஷத்திரங்களைப் போன்ற தன் கிரணங்களாம் எரிகின்ற இறக்கைகளை அகலமாய்ப்பரப்பி விரித்து, ஆகாயத்தில் மிதக்கும் எனது படகின் பின்புறம்பாய்கின்றான். அப்போது சுக்கிரன் ஆகாயத்தின் ஒளிகுன்றி, அழகின்றி, வெளிச்சம் மங்கி மறைந்துபோய்விடுகின்றான். இவன் பாய்ந்துவந்து என் படகில் அமர்ந்திருக்க, பூகம்பம் ஒன்று மலைப்பாறையை, அசைத்து, ஊஞ்சலாட்டும்போது, பூமியைநோக்கி இறங்கிவரும் ஒரு கழுகு, தனது பொன்னிறமான இறக்கைகளின் பிரகாசத்தில் ஒரு நிமிடநேரம், இம்மலைப்பாறையின்மேல் உட்காரலாம். வெளிச்சம் பொருந்தியதாகக் கீழே திகழும் ஆழியிலிருந்து சூரியஅஸ்தமனம், காதல், இளைப்பாறுதல் முதலியஉயரிய உணர்ச்சிகளை வெளியே உயிர்க்கலாம். சாயங்காலத்தின் செந்நிறமான திரை, மேலுள்ள ஆகாயத்தின் ஆழத்திலிருந்து பூமியின்மேல் விழுகின்றது. அப்போது, நிசப்தமாய் அடைகாக்கின்ற ஒரு புறாவைப்போல எனது இறக்கைகளை உள்ளே சுருக்கிக்கொண்டு, நான், எனது காற்றுப்பொருந்திய ஆகாயமாகிய கூட்டில் இளைப்பாறுகின்றேன்.

இராக்காலங்களில், வெண்மையான தீயைச் சுமந்து கொண்டு ஆகாயத்தில் சஞ்சரிக்கும்ஒருகன்னிகையைப் பூமியிலுள்ள ஜனங்கள் சந்திரன் என்று பெயரிட்டு அழைக்கின்றனர். இச்சந்திரன், சிதறிப் பரவிக்கிடக்கும் நள்ளிரவில் வீசும் மெல்லிய பூங்காற்றினால், கம்பளம்போலும் பட்டினைப் போலும் மிருதுத்தன்மை வாய்ந்த எனது வீட்டின்தரையின்மேல் தண்ணிய தன்னொளியைப் பரப்பிக்கொண்டே, பையப்பையப் படர்கின்றாள். அவள்புரியும் நடனத்து அடியொலியைத் தேவர்கள் மாத்திரந்தான் கேட்டினிது மகிழ்கின்றனர். இம்மடமகள் நடந்து சென்றதனால் எனது கூடாரத்தின் மெல்லிய கூரை உடைந்துபோகின்றது. இதனால் ஆகாயவெளியில் ஒளிர்கின்ற நக்ஷத்திரங்கள் எனது கூடாரத்தினது கூரையிலுண்டான துவாரங்களின் வழியாகத் தலையிட்டுக்கீழ்நோக்கிப் பார்க்கின்றன. சந்திரனுக்குப் பின்புறம் இந்நக்ஷத்திரங்கள் சுற்றிச்சுற்றி ஓட்டம் பிடிப்பதைப்பார்க்கப்பார்க்கச்சிரிக்கின்றேன். இந்நக்ஷத்திரங்கள் பொன்னிறமான தேனீக்களின் கூட்டத்தைப்போல் காண்கின்றன. அப்போது நான், காற்றால் கட்டப்பட்ட எனது கூடாரத்தில் கிழிந்துள்ளபாகத்தைப் பின்னும் அதிகப்படுத்துகின்றேன். அதனால் அலையுங் கொந்தளிப்பு மாவாரங்களுமின்றி அமைதியுடனிருக்கும் ஆர்கலியும் ஏரிகளும் ஆறுகளும் வாவிகளும், ஆகாயத்தின் சில பாகங்கள் எனது கூடாரத்திலுண்டான புரையின் வழியாக மேலிருந்து விழுந்ததைப்போல, சந்திரன் நக்ஷத்திரங்கள் முதலியவைகளைத் தம்பால் எழில்பெற இழைத்துவைத்துக்கொள்கின்றன.

நான் சூரியனது சிங்காதனத்தை எரிகின்ற இடிப்பிலணியும் ஒரு கச்சினால் பிணித்துக் கட்டுகின்றேன்; சந்திரனது சிங்காதனத்தை முத்துக்களாலான ஒரு கச்சினால் பிணிக்கின்றேன். எரிமலைகள் மங்கலாக எரிகின்றன; நக்ஷத்திரங்கள் மதுவெறி கொண்டவர்கள் போல் ஆடிபாடி ஆகாயத்தில்நீந்துகின்றன. அப்போது சுழல்காற்று எனது பாயினை விரிக்கவும்விரித்துச் சுருட்டவும் சுருட்டுகின்றன. ககன வட்டத்தின் ஒரு முனையிலிருந்து இன்னொரு முனைவரை, நான், ஓர்பாலம் போன்ற உருவங்கொண்டு, அலைகள் கொந்தளித்தெழுகின்ற கடலின்மேல், சூரிய கிரணங்களுக்குச் சிறிதும் அஞ்சாதவனாய், ஒரு விதானம்போல் அந்தரத்தில் தொங்கிக்கொண்டிருக்கின்றேன். இந்தக் கூரையைத் தாங்கிக்கொண்டிருக்கும் தூண்கள் மலைகளே. ஜெயத்தைப் பாராட்டி, அதன் ஞாபகார்த்தமாகவும், வெற்றிமாலைசூடி வீடுதிரும்பி வரும் வீரனைப் பாராட்டுவதற்காகவும் செய்யப்பட்ட உயரிய சித்திரவேலைப்பாடமைந்த வளைவுகளைப் போலுள்ள வளைவுகளின் கீழே நான் செல்லுகின்றேன். என்னுடைய பரிவாரங்கள் சுழல்காற்று, காற்று மழை, தீ, பனிக்கட்டி முதலியவைகளாகும். இவைகளால் காற்றினது சக்திகளெல்லாம் எனது சிங்காதனத்தில் இறுகிப் பிணித்துக் கட்டப்பட்டிருக்கின்றன. அப்போது பலவிதப்பொலிவுடையை வர்ணங்களுடன் வானவில் ஆகாயத்தில் தோன்றுகின்றது. மேலே, ஆகாயத்திலுள்ள தீ தனது மிருதுவான வர்ணங்களை நெய்கின்றது. உடனே, மழைநீர் தேங்கிக் கிடக்கும் தரை கீழே சிரித்துக்கொண்டிருக்கின்றது.

நான், பூமி தண்ணீர் ஆகிய இவைகளின் புத்திரி; ஆகாயத்தினது வளர்ப்புப்பெண். நான் சமுத்திரம், கடற்கரைகள் முதலியவைகளிலுள்ள துவாரங்களின் வழியாகச் செல்லுகின்றேன். நான் உருவபேத மடைகின்றேனே பொழிய, மாய்ந்தழிய இயலாது. மழைக்குப்பின், கூடாரத்தின் மேற்கூரையைப்போலுள்ள ஆகாயம் மாசின்றித்தெளிவாக இருக்கின்றது. காற்று சூரியகிரணங்கள் முதலியவை தமது ஒளியினால் நீலநிறமான ஆகாய மண்டபத்தைக் கட்டுகின்றன. அப்போது எனது மரணத்தைக் குறித்து ஞாபகார்த்தமாகக் கட்டியுள்ள சமாதிநிலயத்தைப் பார்த்து நான் நிசப்தமாகச் சிரிக்கிறேன். மழை நிரம்பிய நிலவறையிலிருந்து, தாயின் கருப்பத்தைவிட்டு வெளிப்படும் ஒரு குழந்தைபோலும், சமாதியிலிருந்து எழுகின்ற ஆவி போலும் நான், எழுந்து அந்த ஆகாயமண்டபத்தை அங்ஙனே அழித்துவிடுகின்றேன்.

அறிக்கை:—கலா நிலயத்தில் மதிப்புரை வரைவதற்குப் புத்தகம் அனுப்புவார் ரூ. 10 கட்டணம் செலுத்த வேண்டும். அப்பொழுதே புத்தகத்தின் குணங்களையுங் குற்றங்களையும் ஆய்ந்து எழுதுவோம். இல்லையேல் புத்தகத்தின் வரவுமாத்திரம் குறிக்கப்படும்.

# நம்மாழ்வார் வைபவம்

## திருவாய்மொழி

[707-வது பக்கத் தொடர்ச்சி]

3-ம் பத்து, 8-ம் தசகம்.

1-ம் பாசுரம்.

முடியானே மூவுலகுந் தொழுதேத் துஞ்சீ
ரடியானே ஆழ்கடலைக் கடைந்தாய் புள்ளூர்
கொடியானே கொண்டல்வண்ணா வண்டத் தும்பரில்
நெடியானே யென்று கிடக்குமென் னெஞ்சமே

அவதாரிகை:—ஆழ்வார் பகவானைப் பிரத்தியக்ஷத்தில் தாம் காணவேணுமென்ற இந்தத் தசகத்தில் பலவாறு முறையிடுகிறார். இம் மூன்றும் பத்து, 2-ம் தசகம் 10-ம் பாட்டில், திருவேங்கடமுடையான் தமக்கு ஸேவை செய்வித்துத் தம் உயிரை நிலைபெற நிறுத்தினானென்று அன்றோ முன்னர்க் கூறியிருக்கின்றார்? ஆம்—ஆயினும், இடையில் பிரஸக்தியாய் மேலுக்கு ஸந்தர்ப்பங்கள் உதிக்க உதிக்கப் பாடிவந்ததில் 6-ம் தசகத்தில் "கடல் வண்ணன் வெஞ்சமத்து அன்று தேர்கடாவிய பெருமான் கனைகழல் காண்பது என்று கொல் என் கண்களே" என்று ஆசைப்பட்டார். 7-ம் தசகத்தில் பக்தியினால் பகவானுடன் உட்கலந்தவர்களும் பகவானைப் போன்று நமக்குப் பூஜ்ஜியரென்று கற்பித்தார். இந்த உபதேசம் முடியவே, பின்னையும் தேர்கடாவிய பார்த்தசாரதி ஸேவை ஆழ்வாரை வற்புறுத்த, தமக்கு யோக சரசதாத்காசத்திலிருந்த திருவேங்கடமுடையான் ஸேவை ஒதுங்கிவிட்டதுபோலும். பகவானது தேர்கடாவிய திவ்வியமங்கள விக்கிரஹம் காணப்பெறாத வியசநத்தாலே மிகவும் கிலேசப்பட்டுத் தம்முடைய ஸர்வ கரணங்களாலும் ஸர்வப்பிராகாரத்தாலும் எம்பெருமானைத் தாம் அநுபவிக்கவேண்டுமென்று சொல்லிக்கொண்டு கூப்பிடுகின்றார். நம் ஆழ்வார் இத்தசகத்தில் தம்முடைய திருவுள்ளத்திலுள்ள ஆசையை அசேதனங்களான தம் இந்திரியங்களின் மேல் ஏற்றித் தாம்வேறுபோலும் தம் இந்திரியங்கள் வேறுபோலும் பாடும் இது, அவரது ஆசை வெகு பிரகாரப்பட்டு, பற்பல இந்திரியங்களும் தனித்தனியும் ஒன்றாகச் சேர்ந்தும் பகவானது திவ்விய வடிவழகை அநுபவிக்கத் தம்மைத் தூண்டுகின்ற காதலை விவரித்தபடியாகும். முதலில் நெஞ்சம் (அதாவது மனதும்) இரண்டாவது நெஞ்சைப்பார்த்துப் போட்டிகொண்ட வாசகம், (அதாவது ஜிஹ்வாவாகிய நாக்கும்,) மூன்றுவது கைகளும், நாலாவது கைகள் தொழ எத்தனிப்பதைப் பார்த்துக் கண்களும், ஐந்தாவது கண்களுக்கு முன் செவிகளும், ஆறுவது கண்களுக்கு முன்னரே அநுபவிக்கவேண்டுமென்ற பிராண வாய்வும், (இவற்றிற்கெல்லாம் பின்னர்த் தானும்) பகவானது ஸௌந்தரிய சோபையில் தம்மைப்போல் விடாய்கொண்டிருப்பனவாக அருளிச்செய்கிறார். இப்படி இந்திரியக் கூட்டங்களோடு ஆழ்வார் தீனனாய்க் கெஞ்சுவது, பஞ்சத்தில் தம் பிள்ளைகளை அழைத்து, பிச்சை கேட்கப்போகின்ற தகப்பன் முதலில் தன்னுடைய பிள்ளைகளைக் காட்டி அவர்களது பசியை ஆற்றிய பிறகு தன்பசிக்கு உபாயம் தேடுவதுபோல் இருக்கின்றதென்று இருபத்துநாலாயிரப்படி உரைகாரர் எடுத்துக் காட்டுகின்றார். ஒவ்வொரு பாசுரத்தின் முன்னும் அவ்வவ் இந்திரியத்தின் பரபரப்பைத் தலைப்பில் குறிப்பிடுவோம்.

தலைக்கட்டுக் குறிப்பு:-ஆச்ரிதரான தேவர்க்கு ஓய்வு மூப்பு இளைப்பு மரணம் முதலியன இல்லாதவொரு நன்மை உண்டாகும்படி அவர்களோடுகூடச் சமமாய் நின்று க்ஷீராப்தியைக் கடைந்து அவர்களுக்கு அமிர்தம் கொடுத்தவன், தான் ஆசைப்பட்டால் கெருடவாஹனத்தி லேறிவந்து களிப்பை ஊட்டுவானென்று எதிர்பார்த்து அது கைகூடாமையால் குழைந்து குறைவுபடுகின்றது தன் மனம்—என்கிறார்.

பதக்குறிப்புக்கள்:—முடியானே -ஸர்வலோகநாதன் என்கிற குறிப்புத்தோன்ற, தலையில் திவ்விய கிரீடம் தரித்தவனே என அழைக்கின்றார். மூவுலகு, எல்லா உலகங்களும் தொழுது துதிசெய்யும், சீர்-மாட்சிமை, அதாவது ஸர்வோத்கிருஷ்டமானகுணங்களைஉடைய அடியானே—ஸ்ரீ பாதங்களை உடையவனே; புள்ளூர் கொடியானே - கருடனை வாஹனமாகவும் கொடியாகவும் உடையவனே. பக்தர்கள் நினைத்தவுடன் ஏறிவர வாஹன மிருக்கையில் ஏன் வரவில்லை யென்ற கேள்வி எஞ்சி நிற்கின்றது. கொண்டல் வண்ணா - நீலமேக சாமளனே; அண்டத் தும்பரின் நெடியானே - தேவர்களென்ன, சிவன் என்ன பிரம்மா வென்ன நித்தியஸூரிகள்தாமென்ன இன்னவர்கள் எல்லாருக்கும் பிரபுவே; என்று கிடக்கும் என் நெஞ்சம் — கண் காணாமையால் என்மனமாகிய காரணம் குறைவுபட்டுக் குழைந்துகிடக்கும்.

---

2-ம் பாசுரம்.

நெஞ்சமே நீள்நக ராக விருந்தவென்
தஞ்சனே தண்ணிலங்கைக் கிறைவைச் செற்ற
நஞ்சனே ஞாலங்கொள் வான்குற ளாகிய
வஞ்சனே யென்னுமெப் போதுமென் வாசகமே.

தலைக்கட்டுக் குறிப்பு:—மனது நினைக்கும்போதெல்லாம் வந்து அதில் தோன்றி அதிலேயே ஸ்திரப்பிரதிஷ்டனாய் அருள்செய்கின்றவனே, நானு முன்னை நினைக்கும்போதெல்லாம் உன்னைப் பாடவும் துதிசெய்யவும் மனதிற்கு அருள்செய்வதுபோல் எனக்கும் நீ கிருபைசெய்யவேண்டுமென்று நாக்குக் குறைகூறுவதாக இப் பாசுரம் இயம்புகின்றது.

---

3-ம் பாசுரம்

வாசகமே யேத்தவருள் செய்யும் வானவர்தம்
நாயகனே நாளிளந் திங்களைக் கோள்விடுத்து
வேயகம் பால்வெண்ணெய் தொடுவுண்ட வானுபர்
தாயவனே என்று தடவுமென் கைகளே.

தலைக்கட்டுக் குறிப்பு:—தேவர்கள் ஏத்தியும் கைகள் கூப்பி வணங்கியும் வழிபடுவதற்கேற்பப் பிரஸாதம் செய்பவனே; நான் துதிசெய்யும்போது வந்து என் கைகள் கூப்புவதை ஏற்க அருள்செய்யவேண்டும்—என்கிறார்.

பதவுரை:-வேய் அகம்பால்-மூங்கில்களைக்கொண்டு கட்டிய குடிசைகளில், நாள் - புதுமையான, இளம் திங்களை - பாலசந்திரனை, கோள்விடுத்து - முற்றிலுந் தோற்கடித்து; அதாவது, ஸ்ரீ கிருஷ்ணபகவான் பாலியதெசையில் இளம்சந்திரனைப்போன்ற தந்தவரிசை

களால் புன்சிறிப்புடன் நவநீதத்தை விழுங்கச் சந்திர னுடைய காந்தியை ஒத்திருக்கும், வெண்ணெயைத் தொடுவுண்ட-வெண்ணெயைத்திருடி விழுங்கிய,ஆன் ஆயர்தாயவனே-கோபால சிரேஷ்டனே,வானவர் நாய கனே - நீ தேவர்களுக்கு நாயகனாய் நின்று, வாசகமே ஏத்த - வாயால் துதிசெய்ய, அருள் செய்யும் - இப் படிக் கிருபாசாலியான உன்னை, என் கைகள் தடவும் - என் கைகள் தொழுவதற்காகக் கூப்ப உத்தியோகிக் கும்.

4-ம் பாசுரம்.

கைக ளாரத் தொழுதுதொழு துன்னை
வைகலு மாத்திரைப் போதுமோர் வீடின்றிப்
பைகொள் பாம்பேறி யுறைபரனே யுன்னை
மெய்கொள்ளக் காண விரும்புமென் கண்களே.

உரை:-"பைகொள் பாம்பேறி யுறைபரனே, உன்னை யொருக்ஷணமாத்திரமும் ஒழியாமேஎப்போதும்கைக ளாலே ஆரத்தொழுது மெய்கொள்ளக் காணவிரும் பாநிற்கும் என் கண்கள்" என்கிறார்—ஆறுயிரப்படி.

பதக்குறிப்புக்கள்:—பைகொள் - படம் எடுத்துள்ள பாம்பு - ஆதிசேஷன்; மாத்திரைப் போதும்-ஒரு கண (க்ஷண) மாத்திரைப் போதாகிலும், வீடின்றி-இடை யீடு இல்லாமல்.

குறிப்பு:—கைகளும், கண்களும் ஏத்தித் தொழுவ தாவது,—தத்தம் காரியங்களால் துதிசெய்வதுபோல் பாவிக்கை; உபசரிக்கப் பிரயோகம்.

5-ம் பாசுரம்.

கண்களாற் காணவருங் கொலென் றாசையான்
மண்கொண்ட வாமனனேற மகிழ்ந்துசெற்
பண்கொண்ட புள்ளின் சிறகொலி பாவித்துத்
திண்கொள்ள வோர்க்கும் கிடந்தென் செவிகளே.

தலைக்கட்டுக் குறிப்பு, பதவுரை:--கண்களால்-நயன இந்திரியத்தால், காண - கண்டுகொள்ளும்படி, வருங் கொல்-எழுந்தருளுவாரோ என்று, ஆசையான்-ஆசை பற்றி, மண்கொண்ட - பூமியை அளந்து தானம் கொண்ட,வாமனன் - குள்ளமாகிய வேஷத்தாலே எம் பெருமானை, ஏற மகிழ்ந்துசெல்ல,உற்சாகத்தோடுதூக் கித்திரியும்-பண்கொண்ட புள்ளின் - இறக்கைகளால் ஸங்கீத வாத்தியம் வாசிப்பதுபோல் ஒலிக்கும் சிறகு களையுடைய கருடனுடைய, சிறகு ஒலி சிறகுகளின் சப்தமென்று, பாவித்து - (ஆரியத்தில் "பா" ba (போல் ஒலி) மனதால் நினைத்து, திண்கொள்ள - செவ்வனே அறிந்துகொள்ள, கிடந்து ஓர்க்கும்-வெகு ஜாக்கிறதையாய் அவதான புத்தியுடன் கவனிக்கும், என் செவிகள் - என் காதுகள். பண்போல் சத்தம் செய்யும் கருடாழ்வான் கமன ஒலியைக் கேட்க என் காது ஆசைப்பட்டுக் கவனிக்கும்.

# தமிழ்ப் பாடம் 37.

## நள வெண்பா—கலிதொடர் காண்டம்

[705-வது பக்கத் தொடர்ச்சி]

தேன்பிடிக்குந் தண்டுழாய்ச் செங்கட் கருமுகிலை
மான்பிடிக்கச் சொன்ன மயிலேபோல்—தான் [பிடிக்கப்
பொற்புள்ளைப் பற்றித்தா வென்றாள் புதுமழலைச்
சொற்கிள்ளை வாயா டொழுது. 79.

பதப்பிரிவு:—தேன் பிடிக்கும் தண் துழாய் செம் கண் கரு முகிலை மான் பிடிக்க சொன்ன மயிலே போல் தான் பிடிக்க பொன் புள்ளை பற்றி தா என்றாள் புதுமழலை சொல் கிள்ளை வாயாள் தொழுது.

அன்வயம் :—தேன்பிடிக்கும் தண்துழாய்ச் செங் கண் கருமுகிலை மான் பிடிக்கச் சொன்ன மயிலே போல், புதுமழலைச் சொல்கிள்ளை வாயாள் (நளனை) தொழுது, பொன்புள்ளைத் தான்பிடிக்கப் பற்றித்தா என்றாள்.'

பதவுரை.

தேன் - வண்டுகள்
பிடிக்கும் - மொய்க்கின்ற
தண் - குளிர்ச்சிபொருந்திய
துழாய் - துளசிமாலையை அணிந்ததும்
செம் - சிவந்த
கண் - கண்களையுடையதும் ஆன ஒரு
கரு - கருமையான
முகிலை - மேகம்போன்ற இராமனை
மான்-(மாயமாய்வந்த மாரீசனாகியபொன்)மானை
பிடிக்க - பிடித்துத் தர
சொன்ன - ஏவிய
மயிலேபோல்-மயில்போன்ற சீதையையேபோல்,
புது - (கேட்குந்தோறும்) புதிய (இன்பத்தை அளிக்கின்ற)
மழலை - மழலையாகிய
சொல் - மொழிகளையுடைய
கிள்ளை - கிளியைப்போன்ற [தியும்
வாயாள்-(மொழிமிழற்றும்) வாயுடைய தமயந்
தொழுது - (நளனை) வணங்கி
தான் - அவள்
பிடிக்க - கையில் வைத்து விளையாட
"பொன் - பொன்னிறமமைந்த
புள்ளை - அந்தப் பறவையை
பற்றி - பிடித்து
தா - கொடு"
என்றாள் - என்று வேண்டினாள்.

விளக்கம்:—மயிலேபோல் - வாயாளும் புள்ளைப் பற்றித் தா என்றாள், என முடித்துக்கொள்க.

விரிவுரை :—'பேதைமை என்பது மாதர்க் கணிக லம்' என்னும் மூதுரை இருந்தால்தான் என்ன! இப் படியுமா தமயந்தி நடந்துகொள்வாள், என்னும் சந் தேகம் தோன்றலாம். முன்னேரிடத்தில் (84-வது செய்யுள் 391-வது பக்கம்) "பிள்ளைமீன் புள்ளரிக் கும்நாடன் திருமடந்தை" என்று தமயந்தியைக் கவி அழைத்தபோது, அதனில் உள்ளுறை உவமமாய் அவள் கபடு சூது ஒன்றுமறியாப் பேதை என்னும் குறிப்பு அடங்கியிருக்கின்றதென்று காட்டினோம்.

அதற்கு ஆதாரமாக இப்பொழுது இச் செய்தி நிகழ்கின்றது. விதர்ப்பவேந்தனாகிய வீமராஜனுக்கு ஒரு தனி மகளாய்ப் பிறந்து நிடதர்தம் கோமான் நளனை மணந்து வாழ்ந்த இவள், செல்வமும்சுகமும் எல்லாம் இழந்து நடைமெலிந்து ஏழையாய்க் காடடைந்திருப்பதுமல்லாமல் உயிரிற்குஉயிராய இருமக்களையும்பிரிந்த துயர் புதுப்புண்ணாயிருக்கும் இந்த நிலையில், தான் வைத்துவிளையாட ஒரு பறவையைப் பிடித்துத்தரச் சொன்னாளென்றால், இதுஇயற்கையாமோ, பேதைக் குணம்இதனினும்பெரியதுண்டோ, என்றுயாவரும்சந்தேகம் கொள்ளலாம். புகழேந்திப்புலவருக்கும் இந்தச் சந்தேகம் பிறந்தது. இனி, இயற்கைக்கு மாறாகி உலகமலைவாய் நிற்கின்ற ஒன்றைத் தான் எழுதிவைத்தார் என்று எவரேனும் எண்ணி வியத்தலும் கூடும் என இவர் அஞ்சவும் அஞ்சினார்போலும். ஆகையாற்றான் சற்றேறக்குறையத் தமயந்தியின் நிலையிலேயே இருந்த சீதாபிராட்டியும் பஞ்சவடியில் தனது நாயகனைக்கொண்டு ஒருபொன்மானைப் பிடித்துத் தரச்சொன்னசெய்தியை இங்கு நம் நினைவிற்கு வருவித்து அமைத்துக் காட்டுகின்றார் என்று எண்ண இடமுளது. "சீதை மான் பிடித்துத் தரச்சொன்னது இயற்கைக்கு விரோதம் அன்று என்று ஏற்பீர்களாயின், தமயந்தி புள் பிடித்துத் தரச்சொன்னாள் என்று இங்கு நான் கூறுவதையும் ஏற்றுக் கொள்ளவேண்டியவராயிருக்கின்றீர். அதைத் தள்ளினால் இதையும் தள்ளிவிடுங்கள்" என்று நம்மோடு உடன்படிக்கை பண்ணிக்கொள்கின்றவர்போல் இந்த உவமை வந்துநிற்கின்றது.

குறிப்பு:— (1) உம், என்பது ஒரு இடைச்சொல் என்றும், அது ஒகாரம் ஏகாரம்போன்ற மற்றஇடைச் சொற்களைப்போல் பெயர்ச்சொல்லோடும் வினைச்சொல்லோடும் சேர்ந்த பற்பல பொருள்களைத்தரும் என்றும் முன் (484-வது பக்கத்தில்) சொல்லியிருக்கின்றோம். உம்மைக்கு இருக்கின்ற பொருள்களில் எச்சப் பொருளும் ஒன்று. இராமன் வந்தான், இலக்குமணனும் வந்தான்—இந்த வாக்கியத்தில் இலக்குமணனும் என்னும் பெயரிலுள்ள உம்மை, இராமன் மாத்திரம் வந்திருந்த எச்சத்தை (அதாவது குறையை) இலக்குமணனும்வந்து இறந்தகாலத்திலேயே தீர்த்தான்என்ற பொருள் தோன்றுவதால், அதனை இறந்தது தழீஇய எச்ச உம்மை என்பர். இராமன் வந்தான் இலக்குமணனும் வருவான்—என்பது வாக்கியமாயின், இராமன் வந்து இலக்குமணன் வாராதகுறை எதிர்காலத்தில் நீங்குமாகையால், இதனை எதிரது தழீஇய எச்ச உம்மை என்பர்.

வேற்றுமை உருபுகள் தொக்கு இருக்கலாம், விரிந்தும் இருக்கலாம்; பொருளையே முக்கியமாக நோக்க வேண்டும் என்று சொன்னோமல்லவா. அதுபோலவே, இடைச்சொற்களும் சிலபோது மறைந்திருந்து தம் பொருளைத் தரும். இந்தச் செய்யுளில் வாயாள் என்ற பதத்தோடு உம் சேர்ந்திருக்கவேண்டும். இராமனை மான்பிடித்துத்தரச்சொன்னாள்சீதாபிராட்டி அவளைப் போல் தமயந்தியும் நளனைப் புள்பிடித்துத் தரச்சொன்னாள் என்பது கருத்து. ஆகையால் தமயந்தியைக் குறிக்கவருகின்ற வாயாள் என்னும் பதத்தின் கடைசியில் உம் என்னும் இடைச்சொல் இறந்ததுதழீஇய எச்சப்பொருளில் மறைந்திருப்பதாக நாம் வைத்துக் கொள்ளவேண்டும். சீதை கேட்டாள், தமயந்தியும் கேட்டாள், என்று எண்ணுவதுதான் மனதிற்குஇயற்கையாக அமையும்.

(1) முகில், மயில், என்பன உவமை ஆகுபெயர்கள், முகில்போன்ற இராமனையும், மயில்போன்றசீதையையும், உணர்த்துகின்றன.

(2) இந்தச் செய்யுளில் வந்திருக்கின்ற இரண்டாம் வேற்றுமைப் பெயர்களை எடுத்து அவை தொகையா விரியா, உருபும் பயனும் உடன்தொக்க தொகையா, என்று பார்ப்போம்:—

துழாய்:—துழாய்ச் செங்கண் கருமுகிலை, என்றதற்கு அர்த்தம், "துழாயை அணிந்த சிவந்த கண்களை உடைய கரியமுகிலை" என்பது ஆகும். எனவே 'துழாய்ச் செங்கண்' என்பதில் ஐ என்னும் உருபும் அணிந்த என்னும் பயனும் மறைந்திருப்பதால், இது இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை.

கண்:—இதுவும், கண்களை உடைய மேகம், என்று ஆவதால் இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை.

முகிலை:—இரண்டாம் வேற்றுமை விரி. ஐ உருபு தெரிந்து நிற்கின்றது.

மான் பிடிக்க:—மானைப் பிடிக்க, என்று ஆகுமாகையால் இரண்டாம் வேற்றுமைத் தொகை. வேற்றுமை உருபு தவிர அர்த்தம் பூர்த்தியாவதற்கு வேறு ஒரு சொல்லும் தொக்கு இருக்கவில்லையல்லவா?

மயிலே போல்:—மயிலையே போல், என்று ஐ, உருபுமாத்திரம் மறைந்திருப்பதால் இரண்டாம் வேற்றுமைத் தொகை.

புள்ளை:—இரண்டாம் வேற்றுமை விரி, புள் + ஐ:

சொல் கிள்ளை:— சொற்களைப் பேசுகின்ற கிளி, என்று ஐ உருபும் பேசுகின்ற என்னும் பயனும் மறைந்திருப்பதால், இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை.

---

பொற்புள் ளதனைப் பிடிப்பா னளன்—புகுதக்
கைக்குள்வரு மாபோற் கழன்றோடி—எய்க்கும்
இளைக்குமா போல விருந்ததுகண் டன்றே
வளைக்குமா றெண்ணினான் மன். 80.

பதப்பிரிவு:—பொன் புள் அதனை பிடிப்பான் நளன் புகுத கைக்கு உள் வரும் ஆபோல் கழன்று ஓடி எய்க்கும் இளைக்கும் ஆ போல இருந்தது கண்டு அன்றே வளைக்கும் ஆறு எண்ணினான் மன்.

பதவுரை.

நளன் - நளனானவன்
பொன் - பொன் நிறமமைந்த
புள் - பறவையாகிய
அதனை - அதை [பிடிக்க
பிடிப்பான் - (தமயந்தி வேண்டிக் கொண்டபடி
புகுத - ஆரம்பிக்க (அப்பொழுது அது)
கைக்குஉள் - (அவன்) கையில்
வரும் ஆ போல் - (பிடிபட) வருவதைப்போல்
அவன் அருகு வந்தவுடன்
கழன்று - விலகி
ஓடி - ஓடிப்போய்
எய்க்கும் - சோர்ந்து கிடக்கும். [தைப் போல
இளைக்கும் ஆ போல - (இப்படி இது) சோர்ந்த
இருந்தது - இருந்ததை
மன் - அரசன்

கண்டு - பார்த்து
அன்றே - அப்பொழுதே
வளைக்கும் - (அதை) வளைத்துக்கொள்ளும்
ஆறு - வகையை
எண்ணினன் - நினைத்தான்.

விரிவுரை:—புள்வடிவமாய் வந்திருந்த கலிபுருடன் நளன்கையில் அகப்படுவதுபோல நடிப்பதும் அகப்படாமல் வஞ்சித்து அகன்றுவிடுவதுமாக அவனைச் சிறிதுநேரம் ஆட்டங்கண்டு பிறகு களைத்துப்போய் விட்டதுபோல் ஒருபக்கமாக இருந்தது. இதுதான் சமயம் என்று நளன் அதைப் பிடித்துவிட எண்ணினன்.

குறிப்பு:—(1) பிடிப்பான்:—வினையெச்சம்; பிடிக்க என்று சாதாரணமாய்ச் சொலவோம். புகுத என்னும் இன்னொருவினையெச்சத்தைக் கொண்டுமுடிகின்றது.

(2) இருந்தது:—வினையாலணையும் பெயர். இரண்டாம் வேற்றுமைத் தொகை.

(3) வரும் ஆ போல், இளைக்கும் ஆ போல, என்ற இடங்களில் வந்திருக்கின்ற ஆ என்பதே வார்த்தை அன்று. ஆறு, என்பதுதான் வார்த்தை. வரும் ஆறு போல், இளைக்கும் ஆறு போல, என இருத்தல் வேண்டும். ஆறு, என்றால் வழி, விதம், என்பது அர்த்தம். அவ்வாறு செய்தான், இவ்வாறு பேசினன், என்ற உதாரணங்களில் ஆறு என்னும் சொல் அவ்விதம் இவ்விதம் என, விதம் என்னும் பொருள் தருவதைக் காண்க. வரும் ஆறுபோல் - வருகின்ற விதத்தைப்போல் - வருவதைப்போல்; இளைக்கும் ஆறு போல - இளைக்கின்ற விதத்தைப்போல - இளைப்பதைப் போல. எனவே, ஆறு என்று இருக்கவேண்டிய சொல் று என்ற ஈற்றெழுத்தை மறைத்து ஆ என்று மட்டும் நின்றது. இப்படி ஒரு வார்த்தையில் இருக்கவேண்டிய எழுத்துக் குறைந்து செய்யுளில் வருகின்ற வழக்கமுண்டு. ஆறு, என்பதில் ஈற்றெழுத்தாகிய று தொகுத்தலால் ஆ என்று அது நிற்கக்காண்கிறோம்.

முன், நாற்குணமும் நாற்படை ஆ, ஐம்புலனும் நல் அமைச்சு ஆ, என்று (சுயம்வர காண்டம் 21-வது செய்யுள்) வந்துள்ள செய்யுளில் ஆ என்பது ஆக என்னும் சொல்லின் ஈற்றெழுத்தாகிய க, தொக்கதனால் அவ்வாறு நின்றது.

—

கொற்றக் கயற்கட் கொடியே யிருவோரும்
ஒற்றைத் துகிலா லுடைபுனைந்து—மற்றிந்தப்
பொற்றுகிலாற் புள்வளைக்கப் போதுவோ மென்றுரை
பற்றகலா வுள்ளம் பரிந்து. [த்தான் 81.

இப்படிச் சோர்வடைந் திருப்பதுபோல் பாவித்த பறவையை எதனால்பிடிப்பதென்று யோசித்த நளன், தானும் தமயந்தியும் ஒரே துணியின் இரண்டு தலைப்பையும் இருவரும் சுற்றிக்கொண்டு மற்ற ஆடையை மெள்ளக் கொண்டுபோய் அந்தப் புள்ளின்மேல் போட்டுப் பிடித்துவிடலாம் என்று நிச்சயித்து, அவளுக்கு அந்த உபாயத்தைக் கூறினன் என்பதை இந்தச் செய்யுள் கூறுகின்றது.

பொழிப்புரை:—"கயல் போன்ற கண்களையுடையவளாய் மன்மதனது வெற்றிக்கொடி போன்றவளே, நாம் இருவரும் ஒரு துணியை ஆடையாக அணிந்து கொண்டு, மற்ற இந்த அழகியவஸ்திரத்தினால் பறவையைப் பிடிக்கப்போவோம் வா," என்று நீங்காத ஆசையால் அவள்பால் மனமிரங்கி நளன் செப்பினன்.

# திருக்குறள் நீதி

## 2. இல்லறவியல்

[651-வது பக்கத் தொடர்ச்சி]

### 1. இல்வாழ்க்கை

1. இல்வாழ் வானே யின்றுணை யெவர்க்கும்.
2. இழிந்தோர்க் குதவி யில்வாழ் பவனே.
3. ஐந்திடத் தோம்பு மில்லறந் தலையே.
4. பழியஞ்சிப் பாத்துண்டால் வழியெஞ்ச லில்லை.
5. அன்போ டறம்பேணி லின்பம தாகும்.
6. அறநெறி யின்றேற் றுறவறந் தாலென்.
7. முயல்வார் தவத்தென் னிசைபெறி னில்லறம்.
8. துறந்தார் துன்பந் துடைப்பதே மேலறம்.
9. பிறன்பழிப் பில்லாத் துறவறந் தருமே.
10. வையத்துட் டெய்வ மையமிட் டுண்போன்.

### 2. வாழ்க்கைத் துணை நலம்

1. வளத்தக்க செயலாள் கொளத்தக்க துணைவி.
2. குணமில்லாள் வீட்டிற் பணமிருந் தென்னும்.
3. இல்லவள் மாண்பானு லில்லாத தென்னே.
4. கற்புடை மனையாட் கொப்பதொன் றில்லை.
5. நற்குண வதியின் சொற்பிழை யாது.
6. குணவதிக் கெல்லாங் கணவனே தெய்வம்.
7. சிறைகாத் தென்பயன் நிறைகா வாக்கால்.
8. கணவன் றொழுவாட் கிணையிலை வேறு.
9. இல்லா ளிலளேற் செல்லா தவர்சொல்.
10. கற்புடை யாள்பெறும் நற்குணப் புதல்வர்.

### 3. புதல்வரைப் பெறுதல்

1. அறிவுடை மக்களிற் பிறிதிலை பேறு.
2. பழுதிலாப் புதல்வ ரெழுமைக் குறுதுணை.
3. தக்க மக்களே தம்பொரு ளாகும்.
4. மகவளா வியகூழ் மிகவமிழ் தாகும்.
5. மக்கள்மெய் தீண்டின் மனமுங் குளிரும்.
6. மழலை யறியார் குழலினி தென்பர்.
7. அப்ப னுதவி யவைமுன் வைத்தல்.
8. மக்க ளறிவு மன்னுயிர்க் கின்பம்.
9. சான்றோ னென்கை யீன்றோட் கழகு.
10. தக்கோ னென்கை தந்தைக் கின்பம்.

### 4. அன்புடைமை

1. புன்கண் ணீரே அன்பின் சான்றாம்.
2. அன்புடை யார்த மென்பும் பிறர்க்காம்.
3. என்போ டுயிர்வா லன்பின் வழக்கே.
4. அன்பின தாசை யதுவே சிநேகம்.
5. முந்தைநல் வினையே யிந்தநாட் செல்வம்.
6. அறச்செய லன்பே மறத்தையும் போக்கும்.
7. அன்பிலா வறனை யறமே காயும்.
8. எட்டுணை யன்பிலார் பட்ட மரமே.
9. உள்ளன் பிலாதவன் வெள்ளனும் பொக்கும்.
10. அன்பிலான் யாக்கை என்புதோற் போர்வை.

### 5. விருந்தோம்பல்

1. விருந்தோம் பாதவ ரிருந்தோம் புவதென்.
2. மருந்தே யாயினும் விருந்தோ டுண்க.
3. வருவிருந் தாற்றுவான் வறுமையில் வருந்தான்.
4. வருவிருந் தோம்புமில் திருமக ளுறையுள்.
5. வித்தின்றி விளையும் விருந்தோம் புவான்நிலம்.
6. ஓவா விருந்திட்டான் தேவர்விருந் துண்பான்.
7. விருந்தின் பயனை யருந்துவோ ராலறி.
8. விருந்திலாத் தேட்டம் வருந்தினு நில்லா.
9. வறுமையுட் செம்மை வருவிருந் தோம்பல்.
10. உபசரியா விருந்து கைக்குங் கண்டாய்.

### 6. இனியவை கூறல்

1. இன்சொல் லென்பது அன்பொடு பேசல்.
2. இன்சொல் லுடைமை யீதலி னன்று.
3. அன்பொடு நோக்கி யகமகிழ்ந் துரைக்க.
4. துன்பந் துடைக்கி னின்பமாய்ப் பேசுக.
5. பணிவுடை யின்சொ லணியா மெவர்க்கும்.
6. பாவங் குறைவுறின் கூறுவ தின்சொல்.
7. இனியவை கூறுவா னிம்மையில் நீதிமான்.
8. இருமையு மின்பமே யின்சொல னுதல். [சொல்?
9. இன்சொ லினிதெனி லெவன்கொலோ வன்
10. இன்சொற் கனிவிட்டு வன்சொற் காயுணல்.

### 7. செய்ந் நன்றியறிதல்

1. செய்யாமற் செய்வது மெய்யான உதவி.
2. காலத்திற் செய்ந்நன்றி ஞாலத்திற் பெரிது.
3. பயன்றூக்கா ருதவி பயோதர மொக்கும்.
4. தினையன பெறினும் பனையன வெனமதி.
5. உதவிக் களவுகோல் பெறுவோர் மகிழ்ச்சி.
6. துன்பம் நீக்கினோர்க் கன்பறு திருப்பாய்.
7. விழுமந் துடைத்தாரை யெழுமையு நினைக.
8. நன்றியை மறவா தல்லன மறப்பது.
9. ஒன்றுநன் றுள்ளக் கொன்றன்ன தீரும்.
10. செய்ந்நன்றி கொன்றூர்க் குய்வில்லை யன்றே.

### 8. நடுவு நிலைமை

1. மாறு நடுநிலை மேலோங்கு நன்னிலை.
2. செப்பமி லான்பொருள் சேய்க்கு மாகாது.
3. நடுநிலை நீங்கிய படுபொரு ளகற்று.
4. தக்கவர் தகாரென மக்களாற் றெரிக.
5. ஓரமில் வீர மொருவர்க் கணியே.
6. நடுநிலை கெட்டா ரடைவது கேடு.
7. நீதிமான் றாழ்வைச் சாதியா துலகு.
8. தராசு முனைபோல் நிராதரம் நடுநிலை.
9. கோணுதல் கண்டு நாணும் நடுநிலை.
10. பிறன் பொருள் போற்றல் சிறப்புடை ஊதியம்.

### 9. அடக்க முடைமை

1. அடக்க முடைமை யமரரு ளுய்க்கும்.
2. ஆக்கம் வேண்டி லடக்கம் பேணுக.
3. மேம்பா டடையிற் றாங்கி நடப்பாய்.
4. நிலையின் றடங்கின் மலையன்ன மேன்மை.
5. செல்வர்க் கடக்கஞ் சிறந்த பூஷணம்.
6. இம்மையி லடக்க மெழுமைக்கு மாந்துணை.
7. நாகாப் பார்க்குச் சோகாப் பில்லை.
8. தீச்சொல் லாலே தேய்ந்தது நன்மை.
9. தீச்சூ டாறும் நாச்சூ டாறுது.
10. கோபம் விட்டாற் பாபம் பறக்கும்.

### 10. ஒழுக்க முடைமை.

1. ஒழுக்கந் தானே உயிரினும் பெரிது.
2. அறத்தை வளர்க்க ஆசாரம் வேண்டும்.
3. ஒழுக்க முடைமை யுயர்குல மாகும்.
4. ஓதலி னன்றே வேதியர்க் கொழுக்கம்
5. ஒழுக்க மிலானை யுலகம் பழிக்கும்.
6. இழுக்க மறிந்தா ரொழுக்கங் குன்றார்.
7. ஒழுக்கமே யுயர்வு இழுக்கமே பழியாம்.
8. நல்லொழுக்க மல்லாத தல்லற் படுத்தும்.
9. தூநெறி யாரிடந் தீயசொல் லில்லை.
10. உலகொட்ட நடவார் பலகற்று மென்ன.

# ஜூலியஸ் ஸீஸர்

## [ஓர் ஷேக்ஸ்பியர் நாடகம்]

[711-வது பக்கத் தொடர்ச்சி]

### அங்கம் 4, களம் 3.

ப்ரூட்டஸ்:—உள்ளே வா, டிடினியஸ்.

[மெஸ்ஸாலாவை அழைத்துக் கொண்டு டிடினியஸ் வருகின்றான்.]

வருக மெஸ்ஸாலா-இப்பொழுது இவ்விளக்கருகு உட்கார்ந்து ஆகவேண்டியவற்றை ஆராய்வோம்.

காஸ்ஸியஸ்:—போயினையோ போர்ஷியா நீ! (2).

ப்ரூட்டஸ்:—சும்மாவிரு, காஸ்ஸியஸ், உன்னை வேண்டிக் கொள்கின்றேன்—மெஸ்ஸாலா, இள ஆக்டேவியஸ்ஸும் மார்க்ஆண்டனியும் பிலிப்பையை நோக்கிப்படையெழுந்து செல்பவராய் வலிய சைனியத்துடன் நம்மீது வந்துளர் என, கடிதங்கள் எனக்கு வந்திருக்கின்றன (3).

மெஸ்ஸாலா:—அன்னவாறே எனக்குங் கடிதங்கள் கிடைத்திருக்கின்றன.

ப்ரூட்டஸ்:-இன்னும் என்ன சேர்ந்திருக்கின்றது? (4)

மெஸ்ஸாலா:—சட்டமுங் கட்டளையுஞ் செய்து, ஆக்

(1) வேறுபட்டிருந்த ப்ரூட்டஸும் காஸ்ஸியஸும் இகல்தீர்ந்து பழையதம் நட்பினை மீண்டும் உறுதிசெய்து கொண்டபின், டிடினியஸ் மெஸ்ஸாலாவை அழைத்துக் கொண்டுவர, அனைவரும் அங்கிருந்த விளக்கைச்சுற்றி உட்கார்ந்து மேலே நடக்கவேண்டியவைகளைப் பற்றி ஆலோசிக்கப் புகுகின்றனர்.

(2) துயரின் மிகுதியால் காஸ்ஸியஸ் போர்ஷியாவை நினைத்துப் பெருமூச்சு விடுகின்றான்.

(3) எனக்குக் கிடைத்த கடிதங்களிலிருந்து, நம் பகைவர் வலியபகையுடன் பிலிப்பை என்னும் இடத்தை நோக்கிச் செல்கின்றனர் என்பது தெரியவருகின்றது—என்பது பொருள்.

(4) எனக்கு வந்த கடிதங்களில் இல்லாதது இன்னும் என்ன உனக்கு வந்த கடிதங்களில் காணப்படுகின்றது—என்பது பொருள்.

(5) இவ்வங்கத்தின் முதற்களம்முதலில், ஆண்டனியும் ஆக்டேவியஸும் லெபிடியஸ்ஸுங் கூடித் தமக்கு விரோதமாயிருந்த செனட்சபையினர்களில் யார்யாரைக் கொல்

டேவியஸும் ஆண்டனியும் லெபிடியஸ்ஸும், செனட் சபையினர் நூறுபேரைக் கொன்றுவிட்டனர்.

ப்ரூட்டஸ்:-நமது கடிதங்கள் அவ்வகையில் முற்றிலும் ஒவ்வவில்லை. அவர் கட்டளையால் எழுபது செனட் சபையினர் மாய்ந்தனரென்று என்கடிதங்கள் சொல்கின்றன. ஸிஸிரோவும் ஒருவன் (5).

காஸ்ஸியஸ்:—ஸிஸிரோவும் ஒருவனா? (6).

மேஸ்ஸாலா:—அம் மரணதண்டனையின்படி ஸிஸிரோ மாய்ந்தனன்—உன் மனைவியினிடமிருந்து கடிதங்கள் பெற்றனையோ, தலைவ?

ப்ரூட்டஸ்:—மெஸ்ஸாலா, இல்லை.

மேஸ்ஸாலா:—வேறு உனக்கு வந்த கடிதங்களினும் அவளைப்பற்றி ஒன்றும் எழுதியிருக்கவில்லையா?

ப்ரூட்டஸ்:—ஒன்றுமில்லை, மெஸ்ஸாலா (7)

மேஸ்ஸாலா:—அது ஆச்சரியமாகத் தோன்றுகின்றதே.

ப்ரூட்டஸ்:—ஏன் வினவுகின்றனை? உன் கடிதங்களில் அவளைப்பற்றி ஏதேனும் கேள்விப்பட்டனையோ?

மேஸ்ஸாலா:—பிரபு, இல்லை.

ப்ரூட்டஸ்:—இனி, நீ ஒரு உரோமனென்றிருப்பதால், உண்மையைச் சொல் (8).

மேஸ்ஸாலா:—ஆயின், நீயும் ஒரு உரோமன்போல் நான் சொல்கின்ற உண்மையைப் பொறுத்துக்கொள். நிச்சயம் அவள் இறந்தனள், அதுவும் ஓர் விபரித வகையினில் (9).

ப்ரூட்டஸ்:—என்னே, போர்ஷியா, விடைகொள்க! (10).—நாம் சாகவேண்டியவர்களே, மெஸ்ஸாலா: ஒருநாள் அவள் மறிக்கவேண்டும் என்பதை உன்னி அதனை இப்பொழுது தாங்குதற்குரிய பொறுமை உடையவனாகின்றேன் (11).

மேஸ்ஸாலா:—பெரியோர் தம் பெரிய துயர்களை இப்படியே தாங்கவேண்டும்.

காஸ்ஸியஸ்:—கற்றவரையில் உன்னளவு பயிற்சி எனக்கும் இதனில் உளது. எனினும், இதனை இவ்வண்ணம் பொறுப்பதற் கென் இயற்கைக் கியலவில்லையே (12).

ப்ரூட்டஸ்:—நன்று—இனி, நம் கையிருக்குங் கருமத்தைக் கருதுவோம். இப்பொழுதே நாம் பிலிப்பைக்குப் படையுய்த்துப் போவதுபற்றி என்ன நினைக்கின்றீர்? (13)

காஸ்ஸியஸ்:-அது நல்லதென்று நான் நினைக்கவில்லை.

ப்ரூட்டஸ்:—உன் காரணம்?

காஸ்ஸியஸ்:—இது (14). பகைவர் நம்மைத் தேடி வருவதுதான் நல்லது. அதனால், அவர் தம் பணத்தைச் செலவழித்துப் படைஞரை அலைக்கழித்துத் தமக்கே தீங்குசெய்துகொள்கின்றவர்களாவார். நாமோ, இருக்குமிடத்தி லிருப்பதால், இளைப்பாறினவர்களாய் காவல் மிகுந்து, ஊக்கம் நிறைந்தவர்களாவோம். (15)

ப்ரூட்டஸ்:-நல்ல காரணங்கள், அவைகளைவிடத் தகுந்தவைகளுக்கு வழிவிலகி அகலத்தானே வேண்டும் (16). இவ்விடத்திற்கும் பிலிப்பைக்கும் இடையிருக்கும் ஜனங்கள் வலிந்துகொண்ட நட்பிலேதான் நிற்கின்றனர் (17). நமக்குப் படைத்துணைபுரிய மனமற்றவர்களாயினாரன்றோ அவர். பகைவர் அவ்வழி படைநடத்திச் செல்லுங்கால், அவர்

வதென்று முன்குறித்துக்கொண்ட தீர்மானத்தின்படியே நிறைவேற்றிவிட்டனர் என்பது இங்கு இவர்களுக்கு வந்த கடிதங்களால் தெரிகின்றது. கொலையுண்டவர் தொகையைப்பற்றி இவ்விருவருக்கும் வந்த வதந்தி வேறுபடுவது இயற்கையே. அவ்வாறு உயிர்துறக்க நேர்ந்தவர்களில் ஸிஸிரோவும் ஒருவன் என்னும் செய்தி இருவர் கடிதங்களிலும் காணப்படுகின்றது.

(6) வயதுமுதிர்ந்தவனும் எல்லோராலும் நன்கு மதிக்கப்பெற்றவனுமாகிய ஸிஸிரோவையுங் கொல்வதற்குத் துணிந்தனரோ, என்று காஸ்ஸியஸ் வியக்கின்றான்.

(7) போர்ஷியா இறந்தசெய்தியை ப்ரூட்டஸ் அறிந்திருக்கின்றானாயினும், அதுதான் உண்மையோ என்பதை மெஸ்ஸாலாவின் வாயிலிருந்து அறியும்பொருட்டு, தான் ஒன்றும் அறியாதவன்போல் ப்ரூட்டஸ் இப்படிக் கூறுகின்றான்.

(8) உரோமன் என்ற பேரிற்குரிய ஒருவன் ஒன்றையும் மறைக்கலாகாதாதலின் நீ இனி உண்மையைச் சொல்லிவிடு—என்பது பொருள்.

(9) "உண்மையைக் கேட்க நீ மிகவும் வருந்துவாய். ஆயினும், எத்துணை இடர்வரினும் அதனை ஏற்றுக்கொள்வது உரோமர்களுக்கு இயற்கையாகையால் நீயும் இதனைத் தாங்கவேண்டும்," என முன்னுரைத்துப் பிறகு போர்ஷியா இறந்தது நிச்சயம், என்று இயம்புகின்றான். விபரிதவகை என்பது, விஷம் அருந்தியதைக் குறிக்கின்றது.

(10) விடைகொள்தல்—விட்டுப் போகின்றவர் பெற்றுக்கொள்ளும் விடை.

(11) இன்றைக் கல்லாவிடில் என்றைக்கோ ஒருநாள் அவள் இறக்கத்தானே வேண்டும் என்பதை நினைத்து இப்பொழுது அவள் பிரிவை நான் பொறுக்கக்கூடியவனாகின்றேன்—என்பது பொருள்.

(12) கல்விகேள்விகளின் பயிற்சியால் நானும் உன்னைப்போல் இவ்வகை வைராக்கியத்தால் உள்ளந் தேறவேண்டியவனே யாயினும், என்பிறப்பின் இயற்கையானது, இக்கல்வியையுங் கடந்து, என்னைப் போர்ஷியாவின் பொருட்டுத் தாங்காமாட்டாத் துயரங் கொள்ளும்படி செய்கின்றது—என்பது பொருள்.

(13) நம் பகைவர் பிலிப்பையைக் கைப்பற்றப் படையுடன் போகின்றார்களென்று தெரிகின்றது. நாமும் நம்முடைய படைகளுடன் அங்குச் செல்வதே தகுதி யென்று நினைக்கின்றேன். உங்கள் கருத்தென்ன—என்பது பொருள்.

(14) இது, என்பது, அவன் சொல்லவரும் காரணத்தைக் குறிக்கின்றது.

(15) நாம் அலைவானேன், பகைவர்தாம் நம்மைத் தேடியலைந்து வரட்டுமே. அதனால் அவர் களைத்திருப்பர். இருக்குமிடத் திருப்பதால் நமக்குக் காவலும் அதிகம்; களைப்புமில்லை—என்பது பொருள்.

ஸீஸரைக் கொல்வதனிலன்றி வேறொன்றிலும் ப்ரூட்டஸும் காஸ்ஸியஸும் ஒருமனப் பட்டதில்லை. ஆண்டனியையும் ஸீஸருடன் கொல்லவேண்டு மென்று முன் காஸ்ஸியஸ் உரைத்தபோது ப்ரூட்டஸ் மறுத்துவிட்டான். பிறகு, ஆண்டனி சனங்கள்முன் பேசுவதற்கு அனுமதி அளிக்கப்படாது என்று காஸ்ஸியஸ் கூறியதையும் ப்ரூட்டஸ் ஏற்றுக்கொள்ளவில்லை. பின்னிகழ்ச்சிகளைக் காணுங்கால், காஸ்ஸியஸின் மதியே தக்கதென்று ப்ரூட்டஸிற்குத் தெரியவந்திருக்கவேண்டும். எனினும் மீண்டும் இங்கு இவ்விருவருக்கும் முரணே விளைகின்றது.

(16) நீ சொல்வது நல்ல காரணந்தான். ஆயினும், அதனினும் சிறந்தவோர் காரணத்தால் பிலிப்பைக்கு நாம் படையெழுந்து போதலே தகுதி யென்று கூறுகின்

களால் தொகை நிறைந்து, களைதெளிந்து, புதிது சேர்ந்து, ஊக்கம்மிகுந்தவர்களாய் வந்திடுவார்(18). ஆதலின், இச்சனங்கள் நமக்குப் பின்னுகச் சென்று நாம் அங்கே பிலிப்பையில் பகைவரை எதிர்ப்படுவோமாயின், இந்த இலாபங்கள் அவர்களுக்கு எய்தாமல் தடுத்தவர்களாவோம்.

காஸ்ஸியஸ்:—அப்பா, மைத்துன, நான் இயம்புவதைக் கேள் (19)

ப்ரூட்டஸ்:—என்னை மன்னிக்கவேண்டும் (20). அதுவுமன்றி, நம்முடைய துணைவர்களை முடியச் சோதித்தாய் விட்டது,என்பதை நீ உட்கொள்ளவேண்டும். (21). நமது சைனியங்கள் நிறைந்திருக்கின்றன, நமது கருமமும் கனிந்திருக்கின்றது. நம் சத்துருக்களோ நாளுக்குநாள் அதிகமாகின்றனர். உச்சியில் இருக்கும் நாம் இனி இழிவதற்கு ஆயத்தமாயிருக்கின்றோம். (22)மனித விவகாரங்களில் வெள்ளம்வருங் காலமொன் றுளது; அப்பெருக்கினைஏற்றுக்கொண்டால் அதிர்ஷ்டத்தின்பால் உய்த்துச் செல்லும்; விட்டாலோ, அவர் வாழ்நாட் பிரயாணமெல்லாம் திடர்களினும் துயர்களினும் செலுத்தப்பெற்றதாகும் (23.) அத்தகையவோர் நிறைகடலில் நாமிப்பொழுது மிதக்கின்றோம், உதவ வரும்போது நாம் வெள்ளப்பெருக்கினைப் பரிந்தேற்றுக்கொள்ளவேண்டும். அல்லாக்கால், துணிந்திருக்கும் வணிகத்தை இழந்துவிடுவோம்.

காஸ்ஸியஸ்:—ஆயின், உன் இஷ்டப்படியே செல்; நாங்களும் உடன்வந்து அவர்களைப் பிலிப்பையில் எதிர்ப்படுவோம் (24).

ப்ரூட்டஸ்:—இரவெனும் ஆழி நம் உரையின்மீது ஊர்ந்து விட்டது (25). இயற்கையும் அவசியத்திற்கு அடங்கி நடக்கவேண்டும்; கருமியைப் போல் சிறிதே இடமதற்குக் களைப்பாறக் கொடுப்போம். (26). இனியொன்றும் சொல்வதற் கில்லையே?

காஸ்ஸியஸ்:—ஒன்று மில்லை. விடைபெற்றுக்கொள்கின்றேன்.நாளைக்காலை, பொழுதுடன் எழுந்துபுறப்படுவோம்.

ப்ரூட்டஸ்:—லூஸியஸ்! (கூப்பிடுகிறான்)

[லூஸியஸ் வருகின்றான்]

என் மேலங்கி (27). (லூஸியஸ் போகின்றான்) நல்லோய் மெஸ்ஸாலா, நல்விடை கொள்க. நல்லிரவாகுக டிடினியஸ் உனக்கு. பெருந்தகை பெருந்தகைக் காஸ்ஸியஸ் நல்லிரவும் இன்துயிலும் நினதாகுக (28).

காஸ்ஸியஸ் :—எனதருமை மைத்துன, இவ்விரவு தீதே துவக்கியது (29). நமதான்மாக்களுக்கிடையே இத்தகைய பிளவு வரவேண்டா; ப்ரூட்டஸ், அது வரவேண்டா (30).

ப்ரூட்டஸ்:—எல்லாம் நன்றே. (31)

காஸ்ஸியஸ்:—நல்லிரவாகுக, என் பிரபு.

ப்ரூட்டஸ்:-நல்லவென் மைத்துன, நல்லிரவாகுக (32).

டிடினியஸ், மெஸ்ஸாலா:— பிரபு ப்ரூட்டஸ், நல்லிரவாகுக.

ப்ரூட்டஸ்:—அனைவர்க்கும்தனித்தனி நல்விடையளிக்கின்றேன்.

[காஸ்ஸியஸும், டிடினியஸும் மெஸ்ஸாலாவும் போகின்றனர்.]

நேருதலின், இப்படியே செய்தல் வேண்டும்—என்பது பொருள்.

(17) நம்முடைய கட்டாயத்தால் நட்பினர் போல் நிற்கின்றனரே யன்றி, மனமுவந்து அவர் நம்மை நட்பினர்களாய் ஏற்றுக்கொண்டவர்கள் அல்லர்—என்பது பொருள்.

(18) இருமன முடையவர்களாயிருக்கும் இச்சனங்களுக்கிடையே நம் பகைவர் முதலில் வந்துசேர்வார்களாகில் இவர்களுடைய உதவியை யெல்லாம் அவர் பெற்றுக்கொண்டு வலியடைந்தவர்களாய் மிகைத்து நம்மை எதிர்க்கும்படி நேரிடும். ஆகையால், பிலிப்பையைக் கடந்து, இந்தச்சனங்கள் இருக்கும் வழியாய்ப் பகைவர் நம்மைத் தேடிவரும்வரையில் நாம் காத்திருக்கலாகாது—என்பது பொருள்.

(19) என்று காஸ்ஸியஸ் வேறு யாதோ காரணம் காட்டவருகின்றான்.

(20) நீ என்ன சொன்னாலும் நான் கேட்கமாட்டேன் என்னும் குறிப்புடைய மரபுச் சொல் இது.

(21) நம்முடைய துணைவர்களிடமிருந்து நாம் எவ்வளவு உதவிபெறலாமோ அவ்வளவும் பெற்றுக்கொண்டாய் விட்டது,ஆகையால் இன்னுங் காத்திருந்தால் நமது சைனியம் பின்னும் பலமடையும் என்று எண்ணுவதிற் பயனில்லை.—என்பது கருத்து.

(22) நாம் எவ்வளவு பலங்கள் சேகரித்துக் கொள்ளலாமோ, அவ்வளவுஞ் சேகரித்துக்கொண்டாய்விட்டது. இனி நம்பலங் குறைந்தாற் குறையலாமே யொழிய அதிகமாவதற்கில்லை,—என்பது பொருள்.

(23) ஒவ்வொருவனுக்கும் அவன் வாழ்நாளில் தக்க சமயம் ஒன்று வரும். அதனை அவன் பயன்படுத்திக் கொண்டால் எண்ணிய காரியம் கைகூடிய அதிர்ஷ்டசாலியாவான். அந்தச் சமயத்தைக் கைநழுவ விட்டுவிட்டானே, பிறகு அவன்வாழ்நாளெல்லாம் இடையூறுகளும் துயரமுமாகவே முடியும்—என்பது பொருள்.

(24) இதனால், ப்ரூட்டஸ் சொல்லியபடியே செய்யக் காஸ்ஸியஸ் உடன்படுகின்றான்.

(25) நாம் பேசிக்கொண்டிருக்கும் போதே நம்மையறியாமல் நள்ளிரவு ஆகிவிட்டது, என்பது பொருள்.

(26) இரவில் தூங்கவேண்டுவது இயற்கை; நாம் களைத்திருப்பதால் அது அவசியமும் ஆகின்றது. எனினும் வற்புறுத்திக் கேட்போர்க்கு மிகச்சிறிதே வழங்கும் கருமியைப்போல் நாம்இனி மிகச்சிறிது நேரமாயினும் துயிலமர்வோம்—என்பது பொருள்.

(27) என் மேலங்கியைக் கொண்டுவா—என்பது பொருள்.

(28) இவ்வண்ணம் யாவருக்கும் ப்ரூட்டஸ் அருமையாய் விடைகொடுத்தனுப் புகின்றான். காஸ்ஸியஸிற்கு அவன் சிறப்பாகக்கூறும் இப்பரிவுடைய பிரிவுமொழிகள் பாராட்டத் தக்கன.

(29) இவ்விரவின் துவக்கத்தில் நாமிருவரும் இகல் கொண்டிருந்தோம்—என்பது கருத்து

(30) இதனைத் திருப்பிக் கூறுதல் அவன் நெஞ்சின் உருக்கத்தைக் காட்டுகின்றது.

(31) ஒன்றிற்கும் நீ கவலவேண்டா—என்பது பொருள்.

(32) நல்லிரவாகுக—என்பது Good Night என்னும்மரபுச்சொல். காஸ்ஸியஸ் 'பிரபு' என்றுதன்னையழைத்தமை, மறுத்து, மைத்துனன் என்னும் உறவினையே பாராட்டிப் பேசுவதால் ப்ரூட்டஸ் தன் அன்பினைத் தெரிவிக்கின்றான்.

# பொதிகை நிகண்டு

[714-வது பக்கத் தொடர்ச்சி]

## ஆருவது, இயற்கைச் செயற்கைப் பலபொருட் பெயர்த் தொகுதி

அத்தமிர ணியமாழை வங்காரங் காண
மாசைபொலன் செந்தாது மாசையுரை சாமி
பத்திரம்பூ ரியங்காரஞ் சாதகும்பம் புதையல்
பண்டங்காங் கேயமுத லுறைவசுமா டனந்தம்
வித்தமா டகமீகை பொருள்பூரி செங்கோல்
வெறுக்கையரி பீதஞ்சா மீகரஞ்சாம் புனதங்
கைத்துநிதி சந்திரங்கூழ் மித்திரையே யேமங்
காணிகாஞ் சனந்தங்கம் வேங்கைசொன்னந் தனமே.

தனியீழம் பிங்கலந்தே சிகஞ்சாத ரூபந்
தமனிய நிதானம்பீ தகமாடை தொடுக்கங்
கனகமப ரஞ்சிதிர வியஞ்சுவண மருத்தங்
கல்யாண முகரிசெம்பொ னறுபதோ டிரண்டாந்
தொனிதார மிரசதங்கா வுதங்களத புதமே
சுல்லுவெள்ளி வெண்பொன்னுந் திருமேனி யெருவை
செனிவடுத்தாம் பிரஞ்சிக்க முதும்பரமே சுற்பஞ்
\ செம்பாகு மீயம்வங்கஞ் சீருளுஞ்சொன் னதுவே.

சொன்னல்கருந் தாதகிகொல் லயங்கரும்பொ னிரும்பாஞ்
சொன்னவை யைம்பொன்னுந் தராமதுக மாகு
மின்னுறையுங் கஞ்சமும்வெண் கலமாமுன் னைந்தோ
டிவையுந்தா தெழுலோகங் காரீய நாகம்
பின்னுவங்கந் தாளுமா யாபுரியார் கூடம்
பித்தளையா மிவைகூட நவலோக மாகும்
உன்னியவங் காரமே தகணமொடு மாழை
யுலோகமதன் கட்டிகள்சம் பகமிரும்பா ணிகளே.

இரும்புணியே காந்தப்பேர் சந்திரகாந் தப்பே
ரிந்துசிலை சூரியகாந் தஞ்சலா கையதாந்
தருஞ்சூத மிரதம்விந்தாங் கெந்தகப்பேர் நாறி
சத்தியுமாஞ் சாதிலிங்க மிங்குலிக மிலிங்கம்
* பொருங்குலிங்க மாகுமரி தாரப்பேர் பழுப்பாம்
பொரிகார மிடங்கணமாங் காயமிங்கென் றுருகுந்
திரும்புருசி சயிந்தவமே லவணமுப்பின் பேராஞ்
சீதாரி குங்குலியங் குங்குலுகுக் குலுவே. 222.

குலவுமா ணிக்கமுத்து மரகதமே நீலங்
கோமேத கம்பதும ராகமே வயிரஞ்
சிலைவில்வயி டூரியமே பவளநவ மணியாஞ்
செம்மணிமா மணிமாணிக் கப்பேர்முத் தாரம்
அலர்தரள மவுத்திகநித் திலமுத்தம் பச்சை
யரியுமர கதமாகு மணிநீல மாகுங்
கலியில்கோ மேதகப்பேர் மேதைபற்ப ராகங்
கவுத்துவமாம் வச்சிரமென் பதுவயிர மாமே. 223.

வயிடூ ரியம்வால வாயமாம் பவளம்
வருதுவர்துப் பொடுதுகிர்வித் துருமமரத் தழும்பே
ரயிர்பிரவா ளமுமாங்கா சிரற்றினங்கன் மனவோ
டரதனஞ் சலாகைமணிப் பொதுவக்கு மனவு
பயிலுருத்தி † ராக்கமுப்பேர் வளைமணிக்கு மாகும்
பளிங்குபடி கம்பளிக்காங் காரிகமுந் தாதுஞ்
சுயகாவிக் கல்லாகுஞ் சிந்துரஞ் சிலேகஞ்
சுடிகைசுட்டி திலதம்பொட் டிவைதிலகப் பெயரே.

திலகம்புண் டரநுதலி லிடுகுறியாந் தொய்யில்
சேயிழையார் முலைக்கோல மாஞ்சாந்து களபங்
கலவைச்சே றேவிரைகா லேகவண்ணந் தளமாங்
காசறையே லந்தகர மயிர்ச்சாந்தின் பேராம்
புலிகலவை வட்டிகைபீ தமுநான்கு சாந்தாம்
பூசுபொருட் பேரங்க ராகமாங் கூலம்
பலபொருளே மனவகம்பண் ணியம்பண்ணி காரம்
பரிகாரம் வளந்தாரம் பலபண்ட மிவையே. 225.

பண்டாரம் பொக்கிஷப்பேர் தண்டங்கோ சமுமாம்
பளிதம்பா ளிதஞ்சசிகற் சரங்கனசா ரமுமே
கொண்டார்கற் பூரமெனத் தேய்வைசெச்சை சேறு
குழம்பாமச் சுதம்விந்த மறுகரிசிக் கூட்டாம்
அண்டாத துப்பரத்தங் கொம்பரக்காஞ் செம்பஞ்
சலத்தகமாம் பூளையில ‡ வின்பஞ்சின் பேராந்
துண்டான பருத்திபன்னல் தூலம்பஞ் சாகும்
துய்துடர்சூத் திரந்தந்து பனுவலிவை நூலே. 226.

நூலின்முதற் கயிறுகச்சை குணந்தாமம் பழுதை
நுண்பாசம் வடம்புரிநா ணிரச்சையக்கந் தாம்பாஞ்
சாலம்வலை யாம்வலையிற் கயிறுமா சென்பார்
சாணிதிரு நீறுபொடி சாந்தங்காப் பேமஞ்
சூலிவிபூ தியின்பேராம் பொடிபூழி புழுதி
தூளிசுண்ணந் தாதுதுக ணீற்றின்பே ராகும்
வாலடலை வெண்பலிசாம் பருஞ்$சாம்பற் பேரா
மண்சாந்து சுதைகளபஞ் சுடுசுண்ணந் ¶தகுமே. 227.

தகர்சின்னம் பிதிர்சிதர் பராகமே பின்னந்
தரணிரே ணுவின்பேராம் *பிசின்பயினென் றுருகும்
ஞெகிழிதீக் கொள்ளியதாங் கடைக்கொள்ளி முளரி
நீளிரா தமுமலா தமுமாகுங் கந்துள்
பகரிருந்தை நல்லமுமே கரியின்பேர் வெண்டேர்
பாழ்த்தேர்பொய்த் தேர்கானல் பேய்த்தேரின் பேராம்
மகிழ்விதைநென் மணியலகு பலகறையும் பரலாம்
வாய்த்ததுணை யறைதூக்குச் சல்லியெனும் பொருளே.

பொருவுபுன்கம் பாளிதம்பா லடிசிலுணப் புழுக்கல்
போனகந்துற் றுண்டிமிசை மடையயினி பொம்மல்
சருமிதவை கூழசனம் போசனம்பாத் தமலை
சாதமோ தனமன்னம் புகாநிமிரல் மூரல்
பருகுவல்சி புவனகந்துய்ப் பமுதுசொன்றி கவளம்
பட்சணமூண் பதமுப்பாளு றுஞ்சோற் றின்பேர்
சுரருணவு பலிசருவோ டவியாமாற் றுணவு
தோட்கோப்புப் பொதிசோறு கட்டனத்தின் பேரே.

பேருணவு பெருப்பாகும் பாயசம்பாற் சோறும்
பிழைமிச்சில் சேடமிகு பொருளெச்ச மிகையாம்
ஒருமெச்சி லுச்சிட்ட மாங்கருனை பொரியற்
குறும்பேர்பால் பாகாக்கு மோழைகூழ் காடி
யாருறுகஞ் சியின்பேராம் வெந்தையகு குல்லி
யாவியுக்கா ரியின்பேர்பிட் டரிலருப்ப நொடிதாம்
பூரிகமண் டகைதோய்வை யடைநோலை யூபம்
புதுக்கஞ்சம் லட்டுகமோ தகங்களப்ப வகையே. 230.

வகையாம்பிண் ணாக்குலொச்சை வறையல்மலா வகமாம்
மாவின்பே ரிடிநுவணை பிண்டியென மூன்றும்
புகையாணந் தீயல்குழம் பிவைமூன்றுங் கறியாம்
புளிங்கறிப்பேர் துவையாகும் பாளிதமே புல்லந்
தொகையான கண்டயிரே கண்டமென வைந்துந்
தூயகண்ட சருக்கரையா மக்காரம் விசையம்

* பொருங்குலிக (பி - ம)
† ராக்கமிப்பேர் (பி - ம்)

‡ வம்பஞ்சின் (பி - ம்)
$ சாம்பலாகு (பி - ம்)
¶ தருமே (பி - ம்)
* பிசின் பயினு மதற்காம் (பி - ம்)

நகைகன்னல் கட்டிகுள மைந்துசருக் கரையா
நறும்பால்கீ ரம்பயசு பயமமுத னான்கே. 231

அமுதமைய நவநீதங் கவினம்வெண்ணெ னாற்பேர்
ஆகார மவிகிருத மாச்சியந்துப் பிழுது
தமிநேய மேழுநெய்ப்பே ரளைபெருகு ததியுந்
தயிராமோ ரருப்பமுசர் தக்கிரங் கலாயங்
கமழதிக மற்சிகையா மமரிசுதை மருந்து
கனியமிழ்த மமுதப்பேர் களங்கரளங் காள
மூமிழ்கடுவா லங்காலங் காரிசிங்கி நஞ்சா
மூணவூட்டங் குளகிரைதீ னுறைவிலங்கூண் பாலே.

பாலிபடு விழிவிசுளி யிக்காணங் கஞ்சாப்
பாடலி சுயோகிவே கினிமருட்டங் கவ்வை
மாலிமா தவம்பானஞ் சூலிகுந்தி விகுனி
வடியரிட்டஞ் சாயனஞ்சு லோகிசிக்கர் மோலி
யாலிமடம் பேதைபிழி சுவிகைசுரை சூரை
யறிவழிமுண் டகமேதை விளம்பியம்பி தணியல்
சாலியா வசந்தோப்பி நாளிதொண்டி சேறு
சாறும்பல் ஞமலியா † துவமறவி மதியே. 233.

மதுரையுடன் மாரிசுமா லினியைம்பா னிரண்டு
மயக்குகள்ளின் பேராகு நனைநறவு தேறன்
முதுபிரச மதுகரங்கள் வேரிமக ரந்த
முருகுநறை மட்டுமெதுத் தேன்பேர்பன் னிரண்டாம்
இதுகளுமக் கள்ளினுக்காம் வெள்ளில்பா டையின்பே
ரிறுங்காடு சோதனி துரானரலே சிக்குச்
சிதள்மயலுஞ் செற்றையின்பேர் சடுபுசுமை சும்மை
சோடைசும் மாடைந்துஞ் சுமட்டின்பேர்ப் பரப்பே. ()

பரசுகுளிர் கணிச்சிதழ னவியமழுத் தண்ணம்
பாலமுமா மூவிலைவேல் சூல்காளஞ் சத்தி
‡ வெருளுறுமூத் தலைக்கழுவே கழுமுளுஞ்சூ லப்பேர்
விட்டேறு சத்திமதங் கயிலெஃகம் ஞாங்கர்
அரணமுடம் பிடிகுந்த மொன்பதும்வே லின்பேர்
அடற்கைவேல் கப்பணந்தோ மரமாகு நேமி
யொருபருதி சுதெரிசனம் வளையெஃகந் திகிரி
யொளிவட்ட மாழியெட்டுஞ் சக்கரப்பேர் தனக்கே.

தனுசரா சனஞ்சிந்து வாரங்கோ தண்டந்
தடிசிலைது ரோணங்கார் முகஞ்சார்ங்கஞ் சாப
முனிதவர்க்காண் டிபம்வேணு கொடுமரம் பிநுக
மூவைந்தோ டொன்றும்வில்லாஞ் சார்ங்கமால்வில்லாம்
அனகன்விற் பிநுகமதாம் பூரிதொடை நாரி
யாவம்வடங் குணப்பூட்டுச் சிஞ்சினிநா ணரம்பும்
வினையநா ணியின்பேராம் பற்றுக்கை பாசம்
விற்கட்டாம் விற்குதைப்பேர் குலையாம்பத் தினியே.

பத்திரம்போத் திரஞ்சிலீ முகந்தொடை யுரோபம்
பகழிமாற் கணங்கங்க பத்திரங்கோல் பாணம்
அத்திரஞ்சா யகம்புங்கந் தோணிவண்டு கதிரம்
ஆசுகம்பத் திரிபூதைக் கம்விசிகம் பல்லந்
தத்துகணை வாளியேச் சரமம்பின் பேராஞ்
சரக்கட்டுக் குப்பிகுலை புதைபுழுக்கா முடுவே
இத்தரமாங் குதைபகழி புங்கமதா முடுவீர்க்
கிறகுகாம் பாமொட்டம் புதண்டமா வனவே. 237.

ஆவநா $ளிகையாகுந் தூணியம்புக் கூடாம்
அசனிசத கோடிவச்சி ராயுதப்பேர் சம்பம்
பூவயிரங் குலிசமுமாங் குயங்கொடுவா ளரிவாள்
புள்ளமுமா மசிநவிநாந் தகங்கட்கங் கோண
மாவசிமட் டாயுதந்து வத்திவஞ்ச முவளி
வள்ளேதி கரவாளங் குறும்பிடிவாட் சுரிகை
மேவுகண்டங் கண்டகம்பத் திரநாட்ட முசுண்டி
வேணுவிரு பாணிரண்டுங் கத்தியின்பே ரெழுமே.


எழுக்கணையம் பரிகமுமாங் கழுக்கடைமுட் கழுவா
மிகல்வட்டஞ் சுழல்படைபா ராவளைய மாகுங்
கொழுத்ததண்டு பீலியெஃகம் பிண்டிபா லமதாங்
குந்தந்தோ மரங்கொந்த மீட்டிவிட்டே றைந்தும்
பழுச்சவள மாமுலைமூக் கரிகருவி குளிராம்
பருநவியங் கோடாரிப் பேர்குடா ரமுமா
முழிப்பெயரே தறிகைகணிச் சியுமாகு மீர்வா
ளூரக்கரபத் திரமும்வே தினமுமுரைத் தாரே. 239.

தாரொடுகப் பணங்கோல மிருப்புமுண்ணு ராசஞ்
சலாகையாஞ் சுவர்களையுங் கருவிகன்ன மாகுஞ்
சீர்கதைதண் டெறுள்வயிரங் குணில்குறண்டேழ் தடிப்
தேறுசங்கு கூத்திகைகாத் திரிமட்டி முட்டம் [பேர்
போர்முசுண்டி முற்கரமாம் பறளைபற ளிகைகற்
பொறியல்லி யள்ளைந்தும் பற்றிரும்பாங் கவணின்
பேரொடிசில் கவணைகுளிர் குணிலுமா மூசிப்
பேர்சூசி யதின்றுளைப்பேர் பாசமாந் துடரே. 240.

† துவமறைவி (பி - ம்)
‡ வெருளறுமுத் (பி - ம்)
$ ளிகையாவந் (பி - ம்)


ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்

டானிக்குகள் :
ச்யாவனப்ராச
ஜீவஸுதா
பாதாமி லேகியம்
தந்வந்தரி லேகியம்




தைலங்கள்:
அமிர்தாமலக
பிருங்காமலக
ஸுகுமார
ஹிமஸாகர

"பாலஸுதா" குழந்தைகளுக்குச் சிறந்த டானிக் (ரூபா 1-0-0)
காஸ்ட்ராலக்ஸ்: சுத்தம் செய்து மூலிகை சேர்ந்த ஆமணக்கெண்ணெய் (6 அவுன்ஸ் 8 அணா)
ஸ்ப்ளிவரால்: குழந்தை கட்டிக்கும், ஜ்வரக் கட்டிக்கும் (ரூபா 2-0-0)
ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை, (அணா 4) கோரோஜனை மாத்திரை, (அணா 6) பால சஞ்சீவினி (அணா 4)
I.D.L. ச்யாவனப்ராசா I.D.L. பிருங்காமலக தைலம் கோரோஜனை மாத்திரை
"நஞ்சன்கூடு பல்பொடி"
சாதாரணம்-பாக்கெட் (ரிஜிஸ்தர் செய்துள்ளது) I.D.L. 61, மெடிகேடட்-டப்பி
(தபால் பில்லையுடன் லிஸ்டுக்கு எழுதவும். அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.)

# அப்பர்

## அப்பரும் அறுபத்துநான்கு கலைகளும்—29. தருக்கம்

[713-வது பக்கத் தொடர்ச்சி]

(3) கருமம்:—Activity.

கருமம் என்பதைத் தர்க்க நூல்களில் புடைபெயர்ச்சி யென்பார். இது குணங்களைப்போலத் திரவியமாத்திரத்திருப்பது. மூர்த்தத்துவ பரியாய நாமமுடைய விபு அல்லாத பொருளின் பரிமாணத்தோடு கூட ஒரு பொருளில் சமவேதித்திருப்பது. இது எழுதல், விழுதல், முடக்கல், நீட்டல், நடத்தல் முதலிய வேறுபாடுடைத்து. எனவே பிரதிவி, அப்பு, தேயு, வாயு, மனம் என்னும்பொருள்களின் பரிமாணத்தோடுகூடச் சமவேதித்திருக்கும்.

பிரதிவியிடத்துக் கருமம்:—(உ - ம்) ஆலையிடத்துக் கரும்புபட்டுச் சாறுவருவது.

ஆலைப் படுகரும்பின் சாறு போல
    அண்ணிக்கு மஞ்செழுத்தின் நாமத் தான்காண்
சீல முடையார் சிந்தை யான்காண்
    திரிபுரமூன் றெரிபடுத்த சிலையி னான்காண்
பாலினொடு தயிர்நறுநெய் யாடி னான்காண்
    பண்டரங்க வேடன்காண் பலிதேர் வான்காண்
வேலை விடமுண்ட மிடற்றி னான்காண்
    விண்ணிழிதண் வீழி மிழலை யானே.
        திருவீழி மிழலைத் திருத்தாண்டகம் 2.

நீரின் கருமம் அலைத்தல், † ஓடல் முதலியனவாம். மற்று, சொட்டல் இறுகல் உறைதல் ஒழுகலுமுள.

வான்சொட்டச் சொட்டநின் றட்டும்
    வளர்மதி யோடயலே
தேன்சொட்டச் சொட்டநின் றட்டுந்
    திருக்கொன்றை சென்னிவைத்தீர்
மான்பெட்டை நோக்கி மணாளீர்
    மணிநீர் மிழலையுள்ளீர்
நான்சொட்ட வும்மை மறக்கினு
    மென்னைக் குறிக்கொண்மினே.
        திருவீழிமிழலை - திருவிருத்தம் 1.

தேயுவின் கருமம், "நிமிர்தல்":—

ஊராகி நின்ற உலகே போற்றி
    ஓங்கி யழலாய் நிமிர்ந்தாய் போற்றி
பேராகி யெங்கும் பரந்தாய் போற்றி
    பெயராதென் சிந்தை புகுந்தாய் போற்றி
நீராவி யான நிழலே போற்றி
    நேர்வா ரொருவரு மில்லாய் போற்றி
காராகி நின்ற முகிலே போற்றி
    கயிலை மலையானே போற்றி போற்றி.
        திருக்கயிலாயம் - போற்றித்திருத்தாண்டகம் 5.

வாயுவின் கருமம்:—அடித்தலும், * கலத்தலும், வாசனை பல விடங்களிற் பரவச் செய்தலும்:—

வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி
    மீளாமே யாளென்னைக் கொண்டாய் போற்றி
ஊற்றாகி யுள்ளே யொளித்தாய் போற்றி
    ஓவாத சத்தத் தொலியே போற்றி
ஆற்றாகி அங்கே யமர்ந்தாய் போற்றி
    ஆறங்க நால்வேத மானாய் போற்றி
காற்றாகி யெங்கும் கலந்தாய் போற்றி
    கயிலை மலையானே போற்றி போற்றி.
        திருக்கயிலாயம் - போற்றித் திருத்தாண்டகம் 1.

மனத்தின் கருமம்:—அல்வழியிற் செல்லலும் சிந்தையைச் செலுத்தலுமாம். மனதை ஒரு குரங்குக்கு ஒப்பிடுவர்-ஒரு வழியாய் நில்லாமல் அவ்வச் சமயத்திற்குத் தோன்றியவாறு ஓடுவதால். இது பெரும்பாலும் மருளை அவாவு மென்பர் அப்பர்.

மருளவா மனத்தனாகி மயங்கினேன் மதியிலாதேன்
இருளவா வறக்குமெந்தை யிணையடி நீழலென்னும்
அருளவாப் பெறுதலின்றி யஞ்சினா னலமந்தேற்குப்
பொருளவாத்தந்தவாறேபோதுபோய்ப்புலர்ந்ததன்றே
        தனித்திருநேரிசை 1.

எனவே, கருமமாவது உயிருள்ள பொருள்களின் இராசசகுணத்தின் விசேடமாம். இது காணக் கூடியதாதலால், எல்லைவரம்பில் அடங்கும். விபுவான பொருளுக்குக் கருமமுண்டெனில் அதுகாணக்கூடாததாயும் எல்லையற்றதாயுமிருக்கும். அது பற்பலவகையிற் செய்கைகாட்டினும், கருமமென்னல் பொருந்தாது. அதைச் சிந்தையுள் ஆழ்ந்து அறியக்கூடுமன்றிச் சட சம்பந்தத்தில் காணக்கூடாதாகையால் கருமமாகாது.

மூன்று மூர்த்தியுள் நின்றிய லுந்தொழில்
மூன்று மாயின மூவிலை சூலத்தன்
மூன்று கண்ணினன் தீத்தொழில் மூன்றினன்
மூன்று போதுமேன் சிந்தையுள் மூழ்குமே.
எட்டு மூர்த்தியாய் நின்றிய லுந்தொழில்
எட்டு வான்குணத் தீசனெம் மானானை
எட்டு மூர்த்தியு மெம்மிறை யெம்முளே
எட்டு மூர்த்தியு மேம்மு ளோடுங்குமே.
        தனித் திருக்குறுந்தொகை 18.

அண்ட மாரிரு ளூடுக டந்தும்பர்
உண்டு போலுமோ ரொண்சுட ரச்சுடர்
கண்டிங் காரறி வாரறி வாரெலாம்
வெண்டிங் கட்கண்ணி வேதியன் காண்மினே.
        சித்தத் தொகை - திருக்குறுந்தொகை 2.

(4) சாமாநியம்:—அதாவம் சாதி. இதைத் துவம் என்னும் அடைமொழியால் தர்க்கத்தில் கையாளுவர். இது பரசாதியென்றும், அபரசாதி யென்றும் இரு வகை. இவ்விருவகையும், திரவியம் குணம் கருமம் என்னும் மூவகைப் பதார்த்தங்களிலும் காணலாம்.

---

† பெருகி யலைக்கின்ற ஆறே போற்றி,
    பேராநோய் பேர விடுப்பாய் போற்றி!
உருகி நினைவார்தம் முள்ளாய் போற்றி,
    ஊனந் தவிர்க்கும் பிரானே போற்றி
அருகி மிளிர்கின்ற பொன்னே போற்றி
    யாரு மிகழப் படாதாய் போற்றி
கருகிப் பொழிந்தோடு நீரே போற்றி
    கயிலை மலையானே போற்றி போற்றி.
        திருக்கைலாயம் போற்றித் திருத்தாண்டகம் 8.

* காற்றானைக் கலக்கும் வீணை போயறத்
தேற்றானைத் திரு வண்ணா மலையனைக்
கூற்றானைக்கொடி யார்புர மூன்றெய்த
ஆற்றானையடி யேன்மறந் துய்வனோ.
        திருவண்ணாமலை—திருக்குறுந்தொகை 4.

பரசாதியாகிய சாமாநியம் குலவகையாற் காணப்பட்டது. அபரசாதியாகிய சாமாநியம் உபாதிவகையாற்காணப்பட்டது. நீரில், நன்னீர் உவர்நீரென இருவகை உளவன்றோ? இச்சாதிபேதம் பரசாதி சாமாநியம். ஒரு கிணற்றுநீரைப் பானையிலும், செம்பிலும், ஜாடியிலும், புட்டியிலும் நிறப்புவோமாயின், அக்கிணற்று நீர் மேற்கூறிய நால்வகை யுபாதியால் நால்வகை அபர சாமாநியமாகும் சாமாநியம் என்பதை ஆங்கிலத்தில் Identity (ஒரேமாதிரித் தன்மை) யென்பர். சாதிவகையிலாயினும், உபாதிவகையி லாயினும் ஒரேமாதிரியான தன்மை காணப்படினும், எக்காரணத்தினாலேனும் சற்றுப் பேதங்களிடையே காணப்படும் ஒருமாதிரித்தன்மையே சாமாநியமாகுமன்றி, யாதொரு பேதமுமில்லாத இரண்டு பதார்த்தங்களுக்குச் சாமாநியம் காட்ட ஏலாது (There is no absolute identity but only an identity in difference). எனவே, சாமாநியம், பின்னமாய் வேறுபட்ட இலக்கண பிண்டங்களின் வடிவஞானம் எல்லாவற்றினும் அடைந்த ஒன்றனைப் பற்றி நிற்குமென்ப. புரவிகளையும் பசுக்களையும் ஒன்றாய்க் காணுங்கால், பலவர்ணமும் வடிவுமுடைய பசுக்களை ஆவென்றும், அவ்வாறே குதிரைகள் பற்பல பேதங்களுடன் காணப்பட்டாலும் அவற்றைப் புரவிகளென்றும் பிரிப்பது, இச் சாமாநியத்தாலேயாம். இன்றேல் கீழ்வரும் பாசுரத்தில் கண்டவாறு சாமாநிய மற்ற தன்மைபாய் முடியும்.

வேறிணை யின்றி யென்றும்
விளங்கொளி மருங்கி னாளைக்
கூறியல் பாகம் வைத்தார்
கோளரா மதியும் வைத்தார்
ஆறினைச் சடையுள் வைத்தார்
அணிபொழில் கச்சி தன்னுள்
ஏறினை யேறு மெந்தை
யிலங்குமேற் றளிய னாரே.

திருக்கச்சி மேற்றளி-திருநேரிசை 9.

(5) விசேடம் :—அதாவது ஒன்றினை மற்றொன்றிலிருந்து பேதித்துக் காட்டுவது. இதை ஆங்கில தர்க்கத்தில் (Difference) பேதத்தன்மையென்பர். அது ஒற்றுமைக் குணத்தில் வயங்குவது (There is no absolute difference but only a difference amidst identity). எனவே விசேடம், நித்தியமாகும். நித்தியத் திரவியத்திலிருக்கும் நித்திய திரவியமாவன, ஆகாயம் முதலிய ஐந்தும், பரமாணுரூபமான பிரதிவியாதி நான்குமாம்.

நித்தியத் திரவியங்கள் தம்முள் வேறுபட்டிருத்தலைத் தெரிவிப்பது அவற்றின்கண் உள்ள சாமாநிய முதலியனவாதலின் அவற்றை விசேடமென்பர். விசேடமென்பது சாதாரண மொழியில் சிறப்பு என்னும் பொருள்தரும். கங்கையுந் திங்களும் சிவபெருமான் சடையில் தங்குவது ஒரு விசேடமாகும்.

பலவும் வல்வினை பாறும் பரிசினால்
உலவுங் கங்கையுந் திங்களு மொண்சடை
குலவி னான்குளி ரும்பொழிற் கோளிலி
நிலவி னானறனை நித்த னினைமினே.

திருக்கோளிலி - திருக்குறுந்தொகை 4.

அந்நியோந்நியபாவத்திற்கு விரோதிபாய்ச் சாமாநியமற்றதாய் நித்தியதிரவியங்களில் சமவேதித்து நித்தமாயிருக்கும் நிலைபை விசேட மென்பர். "மாலைத்தோன்றும் வளர்மதி" "ஆலைக் கரும்பின் சாறு", இவை மதி, சாறு என்னும் பதார்த்தங்களின் விசேடங்களைக் காட்டும்.

விரிகதிர் ஞாயிறல்லர் மதியல்லர் வேத
விதியல்லர் விண்ணும் நிலனும்
திரிதரு வாயுவல்லர் செறுதீயு மல்லர்
தெளிநீரு மல்லர் தெரியில்
அரிதரு கண்ணி யாளையொரு பாக
மாகவருள் காரணத்தில் வருவார்
எரியர வாரமார்ப ரிமையாரு மல்ல
ரிமைப்பாரு மல்ல ரிவரே.

சிவனெனு மோசை 2.

(6) சமவாயம்:- நீக்கமின்றி யிருப்பவற்றின் சம்பந்தம் சமவாய மெனப்படும்:—

ஊனவன்கா ணுடலுனக்கோ ருயிரா னான்காண்
உள்ளவன்கா ணில்லவன்கா ணுமையாட் கென்றும்
தேனவன்காண் டிருவவன்காண் டிசையானான்காண்
தீர்த்தன்காண் பார்த்தன்றன் பணியைக் கண்ட
கானவன்காண் கடலவன்காண் மலையா னான்காண்
களியானை யீருரிவைக் கதறப் போர்த்த
வானவன்காண் வானவர்கள் வணங்கி யேத்தும்
வலிவலத்தான் காணவனென் மனத்து ளானே.

திருவலிவலம் - திருத்தாண்டகம் 2.

இவ் வொற்றுமைச்சம்பந்தம் அவயவ அவயவிகள் நீக்கமின்றியிருப்பது. ஆயினும் உண்மையில் பொருள்கள் வேறு வேறு ஆவதால், இவற்றின் சம்பந்தம் ஒரு நிலையில் சையோக சம்பந்தமாயும் மற்றொரு நிலையில் சமவாயமாயும் காணப்படும்.

கூற்றுவன்காண் கூற்றுவனைக் குமைத்த கோன்காண்
குவலயன்காண் குவலயத்தி னீரா னான்காண்
காற்றவன்காண் கனலவன்காண் கலிக்கு மின்காண்
கனபவளச் செம்மேனி கலந்த வெள்ளை
நீற்றவன்கா ணிலாவூருஞ் சென்னி யான்காண்
நிறையார்ந்த புனற்கங்கை நிமிர்ச டைமேல்
ஏற்றவன்கா ணெழிலாரும் பொழிலார் கச்சி
யேகம்பன் காணவனென் னெண்ணத் தானே.

திருக்கச்சியேகம்பம் - திருத்தாண்டகம் 1.

## கம்பராமாயணம்

### ஆரணிய காண்டம்—7. மாரீசன் வதைப் படலம்.

[716-வது பக்கத் தொடர்ச்சி]

மலைய வரைவர் வடமொழி வாணர்.

கலையின் விழுப்பமோ, மற்று, கைவழுக்குற்றதேயோ என்று ஒருபாற்படாமல் ஓதுவோர் உள்ளம் உழைக்க எழுதுந்திறமை வான்மீகி முனிவருக்குப் போதவுளது. சரிந்திருந்த தன் வயிற்றைச் சற்றேனும் மறைக்காமல் வந்தடைந்த சூர்ப்பணகை, சானகியின் ஆலிலையன்ன வயிறதனைச் சரிந்ததென ஏசியேசி இராமனுக்குக் காட்டினாள் என்றியம்பினர் அம்முனிவர். இதனில் மையனுடை யரக்கியின் மதியினை நகுவார், ஒருகால், அன்னவா றவளை இயம்பவைத்த கவியின் மதியினை அயிர்த்தலுங் கூடும். ஆயினும், கண்கூடாய வேற்றுமையைக் காணமறுத்து, தன்னைப்போல்சரிவயிறுடையாள் சானகியும் எனச் சாதிக்கப் புகுந்தாளேனும், இழிதகை மாந்தர் காமத்தா லழியுங்கால் எப்பிழையும் அவர்க்கியற்கையேயாம் என்னுஞ் செய்தி அச்செய்கையுள் அடங்கியிருக்கும் வாய்மையை அறிதல் வேண்டும். தம்மைப் போலவே பிறரை மதித்தல் தகவிலா மாந்தர் குணம். சீதையைக் கண்ணுற்றவு

டன் சூர்ப்பணகை, "என்னைப்போல் இவளும் இடையே வந்தாள்" என்று எண்ணினுளென்றும் அப்படியே இராமனுக்கும் இயம்பினுளென்றுங் கம்பர் கூறினர். தொழில் குணம் முதலியவைகளில் ஒருவர் தன்னைப்போல் பிறரை மதிப்பதில் நம்பத்தகாத வியப்புத் தோன்றுவதில்லை. மற்று, உருவத்தில் அத்தகைய மயக்கத்தைப் பேசினுலோ என்னிது மதியெனப் பெரிதும் அயிர்க்கின்றோம். எனினும் ஆழ்ந்த சிந்தனையோடு ஆராயுங்கால் இவ்விரண்டிற்கும் அளவில் வேறுபாடு அமைந்திருக்கின்றதே யொழிய இவைகளை இயக்குகின்ற இயற்கையின் இரகசியத்தில் யாதும் வேறுபாடில்லை என்பது தெரியவருகின்றது. வடநூலிற் போலல்லாது கம்பர் தம் காவியத்தில் சூர்ப்பணகை வடிவமைப்பின் வனப்பெலாந் தாங்கி வந்தாளாதலின், தன் வயிறுகொண்டு சீதையைப் பழிக்கமாட்டாதவளாகித் தொழிலையே சார்த்திப் பழிக்கவேண்டியவளாயினுள். ஆதலின், இத்திறத்தில், வடமொழிவாணர், கைவழுக்கினுரலர் என்பதை நம்பலாகின்றோம். இன்னவாறு கம்பரது உரையைக் கொண்டு வான்மீக முனிவரது உண்மையை உணரப்பெருவிடின், சூர்ப்பணகையின் கண்கள் விளைத்த முரணிற்கு ஓர் அமைதிகாணல் அரிதாகிவிடும். எனின், அத்தெய்வமாக்கவி மாட்சி தெரிக்கவே தாமொரு தமிழ்நூல் பாடினுரெனக் கூறிய கம்பர், தன் அடக்கத்தையோ மற்றுத் தன் கவியின் பெருமையையோ பேசினுர் என்னும் ஐயத்திற்குஇறுதிகாணல் எளியதன்று. அன்னதற்கோர் உதவியைப் புரிதற்குரிய செவ்வியொன்று கம்பருக்கு இப்பொழுது நேர்ந்திருக்கின்றது.

கரனுடன் அரக்கரெல்லாம் உரமழிந் தொழிந்த வளவில் எஞ்சிய நிருதன் அகம்பனன் என்பான் இராவணன்பால் விரைந்தோடி உற்றது அத்தனையும் உற உற இயம்பினுனெனச் சாற்றி வான்மீகிமுனிவர் பின் வருமாறு நிகழ்த்துகின்றார்: கரன்முதல் அரக்கர் தம் அழிவினைக் கேட்டு அழன்றனன் இராவணன். இராமனது ஆற்றலைக் கேட்டு ஆர்ப்பரித்தனன்; சீதையின் அழகைக் கேட்டு அவாக்கொண்டனன். இமைப்பொழுதில் மாரீசன் இருந்த விடம் ஏகினுன். ஏகி அங்கு அவனுக்கு யாவுங்கூறித் தான் இராகவன்மனைவியைக் கவர்ந்து கொள்ளத் துணிந்திருந்த செய்தியையுஞ் சொன்னான். மாரீசனே அங்ஙனே அவனை மறுத்து, இராமனதுபேராற்றலைப் பலவாறு எடுத்தோதி அன்னவன் மனைவியைக் கவர்தல் ஒருபோதுமாகாமை வற்புறுத்தி "வெகு பயங்கரமான இராமனென்னும் சமுத்திரத்தில், ராக்ஷசேந்திரா, நீ விழுந்துவிடாதே. இலங்கை நாயக, கோபங்கொள்ளற்க. அரக்கரேறே, சௌக்கியமாக வந்தவழியே திரும்பி இலங்கைக்குச் செல். நீ நின் மனைவிமார்களோடு எப்போதும் இன்புற்று வாழ்ந்திரு. இராமன் தன் மனைவியோடு வனத்தில் வசிக்கட்டும்" எனவிலக்க, இராவணன் இலங்கை மீண்டனன்.

மீண்டு, "அந்தணர் வேள்வியுடன் அரிவையர் கற்பினை யழிப்பவனும், வாசுகியை வென்று தக்ஷகனுடைய அன்பான மனைவியை எடுத்தோடினவனும், விஷ்ணுவின் சக்கரத்தால் நூறுதரம் அடிபட்டவனும் குபேரனைச் சயித்துப் புஷ்பகவிமானத்தைக் கொண்டு வந்தவனும், மிகக் கொடியவனுமான இராவணன், வாயைப் பிளந்துகொண்டு உட்கார்ந்திருக்கும்யமன் போலப் பயங்கரமாய்த் தன் மண்டபத்தில் அரியணையில் அரசுவீற்றிருக்கும் வேளையில்," அவன் தங்கை சூர்ப்பணகை அற்றமூக்கும் அருதொழுகுங் குருதியும் உடையளாய் வந்துதோன்றித் தன் முன்னவனை இன்னன இயம்பி நிந்திக்கலானுள்.—

"போகங்களில் களிமயக்குற்றுக் கிடக்கும் நீ, நினக்கு வரவிருக்கும் பெருங் கேட்டினை அறிந்தாயல்லை. ஒற்றுடாத அரசனைக் குடிகள் கைவிட்டு நீங்கிவிடுவார். புத்தியில்லாத அரசன் விளங்கமாட்டான். நமது சுற்றத்தார் ஜனஸ்தானத்தில் மாண்டதை நீ யின்னும் அறிந்துகொள்ளாமையால், ஒற்றர் உதவியும், மந்திரிகள் நன்மதியும் உனக்கு வாய்க்கவில்லை என்பது தெரிகின்றது. பதினுலாயிரம் அரக்கர்களுடன் கரனையும் தூஷணனையும் இராமன் ஒருவன் ஒன்றரை முகூர்த்தத்தில் கொன்று வீழ்த்தியிருக்க, அதனை ஒற்றர்களால் அறிந்துகொள்ளாத நீ துற்புத்தியுள்ளவன், நற்குணங்கள் இல்லாதவன், உனது இராச்சியத்தை இழந்து விரைவில் அழிவடையப்போகின்றாய்".

இது கேட்க, முன்னரே பிளந்திருந்த வாய் (வாய்கள்?) பின்னும்பிளந்ததே யொழிய இராவணன் தானித்தனையும் அகம்பனனுல் அறிந்திருந்தா னென்று செப்பினுனலன்; நல்ல தன் தங்கையின் மூக்கொடு காதும் மூளியாய்ப் போனவாறு யாதென்று கேட்டானுமல்லன். மற்று, இராமன் யாரென்றும் அவன் உருவமும் ஆற்றலும் பயின்ற படைக்கலன்களும் எத்தகையனவென்றும் அவன் தண்டகாரணியம் போந்தது காரணம் யாதென்றும் வினவினுன். வினவுதலும் அவ்வரக்கி, இராமலக்குமணர்களது அளவிறந்த அழகினையும் ஆற்றலையும் பலபட எடுத்தோதியபின் சீதையின் சிறப்பையும் செப்பி,

"எவனுக்குச் சீதை மனைவியோ, எவனைச் சீதை சந்தோஷத்தோடு தழுவுகின்றாளோ அவனுடைய பாக்கியம் இவ்வுலகத்தில் இந்திரனுடைய பாக்கியத்திற்கு மேலானது. அவள்தான் நினக்குச் சரியான மனைவி, நீ தான் அவளுக்குச் சரியான கணவன். அம்மடந்தையை நின்னுடைய மனைவியாக்க வேண்டுமென்று நான் எடுத்துக்கொண்டுவர முயன்றேன். அதற்காகத்தான் கொடிய லக்ஷ்மணன் என்னை இவ்வாறு அங்கபங்கஞ் செய்தான். அவளை நீ கண்டால் அதுமுதல் நீ மன்மத பாணங்களால் வருந்துவாய். அவளை மருவவேண்டுமென்று இஷ்டமிருந்தால் உடனே வெற்றியடையும்பொருட்டு வலக்காலைத் தூக்கிவைத்துநட. காட்டில் வசிக்கும்இராமனைக்கொன்று மாண்டொழிந்த இலக்ஷ்மணனையுங் கொன்று கணவனையிழந்த சீதையை மணஞ்செய்துகொள். அரக்கர்வேந்தே, நான் சொல்வது நின் மனத்திற்கொத்திருந்தால் உடனே நான் சொல்லும் வண்ணம் நட. அவர்கள் வலிமையையும் உன்னுடைய பலத்தையும் சீர்தூக்கிப் பார்த்து அப்பெண்ணைப் பலாத்காரமாகக் கொண்டுவந்துவிடு. அவயவக் குற்றங்கள் ஒன்றுமில்லாத அழகிய சீதையே உனக்கேற்ற மனைவி. இராமன், தனது கொடிய பாணங்களால் ஜனஸ்தானத்திலிருந்த அரக்கர் எல்லாரையும் வதைத்ததைக் கேட்டும், கரதூஷணர்கள் மாண்டதைக் கண்டும் நீ எவ்வாறு நடந்துகொள்ளவேண்டுமோ அவ்வாறு நடந்துகொள்"

என்று முடித்தாள். இராவணனும் கருமமும்இடமும் கருவியும் யாவும் சிந்தித்து இரகசியமாக மீண்டுமோர் முறை மாரீசனை நாடிப் புறப்பட்டான்.

சென்னைத் தமிழ் லெக்ஸிகன் பதிப்பாசிரியர் திருவாளர் S. வையாபுரிப் பிள்ளையவர்களால்

## — பதிப்பிக்கப்பெற்ற நூல்கள் —

### தமிழகராதி ஆதார நூற்றொகுதி
### நாம தீப நிகண்டு.

நிகண்டுகளின் வரலாறு, ஆசிரியரது காலம், நூலின் நயங்கள், முதலியன அடங்கிய சிறந்த முன்னுரை கொண்டது. பொருட் பெயர்களை விளங்கக் கூறும் செவ்விய உரைபாடமுள்ளது. நூலின்கண் வந்துள்ள பொருட்பெயர்களனைத்தையும் முற்ற வுணர்த்தும் அனுபந்தம் பெற்றது. சுமார் 12000 சொற்கள் கொண்ட சிற்றகராதியாக உதவுந் தகையது.

விலை ரூபா **2-0-0**

### அரும்பொருள் விளக்க நிகண்டு.

சிறந்த ஒரு சொற் பல்பொருள் நிகண்டு. நிகண்டுகளின் வரலாற்றினை விளக்கும் விரிந்த முன்னுரையுடன் கூடியது. சொல்லின் பொருள்களை யெளிதாகத் தெரிந்துகொள்ளுதற்குப் பலபொருளொருசொல்லகராதி சேர்க்கப்பட்டுள்ளது. விலை ரூபா **1-4-0**

### கம்பராமாயணம்—உயுத்தகாண்டம்.

முதல் மூன்று படலங்கள்: பல ஏட்டுப் பிரதிகளை ஒப்புநோக்கித் திருத்தியது; பாடபேதங்களனைத்துங் கொடுக்கப் பெற்றது. விலை ரூபா **0-6-0**

### திருக்குறள்

மூலமும் சொற்குறிப் பகராதியும் விஷய ஒப்புக்குறளும்
(வா. மார்க்க சகாயம் செட்டியார் பதிப்பு)

சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைக்கு மாத்திரம் 300 பக்கங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. திருக் குறளைப் படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமானதாகும். ஒப்புக்குறள்களைச் சேர்த்துப் பதிப்பாசிரியர் அளித்துளது மாணுக்கருக்குப் பெரிதும் பயன்தரும். இப்பதிப்பின் அருமை பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக்காட்டுவது சுலபமன்று. விலை அணு **0-12-0**

### களவியற் காரிகை.

ஒரு சிறந்த அகப்பொருளிலக்கண நூல்; முதன் முறை இப்போதுதான் அச்சில் வெளிவந்தது. கிடைத்தற்கரிய பல அரிய நூல்களிலிருந்து எடுக்கப்பெற்ற மேற்கோள்களை யுடையது; பல அனுபந்தங்களையுடையது தமிழாராய்ச்சியாளர்க்குப் பெரிதும்பயன்படுவது. க்ரௌன் அளவில் 170 பக்கங் கொண்டது. சொற்பப் பிரதிகளே யுள்ளன. விலை ரூபா **3-0-0**

### நூற்பொருட் குறிப்பு.

1. இறையனார் களவியலுரை; 2. குறுந்தொகை; 3. திருக்கோவையார்; 4. நற்றிணை; 5. களவழி நாற்பது; 6. தேவாரம்; 7. வீரசோழியம்; 8. நாலாயிர திவ்யப் பிரபந்தம் முதலிய எட்டு நூல்களின் பொருட் குறிப்பு அடங்கியது. தமிழ் லெக்ஸிகன் ஆபீஸ் தலைமைப் பண்டிதர் ஸ்ரீமான் மு. இராகவையங்காரவர்களால் தொகுக்கப்பட்டது. டெம்மியளவில் 175-பக்கங்கள் உடையது. இலக்கிய ஆராய்ச்சிக்கும் சரித்திர ஆராய்ச்சிக்கும் மிக இன்றியமையாதது. சொற்பப் பிரதிகளே யுள்ளன. விலை ரூபா **10-0-0**

### இராஜசுந்தரம்.

ஒரு நவீனகம். இனிய எளிய நடையில் எழுதப் பெற்றது. விலை ரூபா **0-8-0**

### தினகரமாலை யென்னும்-தினகர வெண்பா

திருக்குறளின் அதிகாரத்திற் கொரு வெண்பாவாக 133 வெண்பாக்களைக் கொண்டது. இது ஒரு பண்டை நூல். இதைப் பதிப்பித்தவர் ஸ்ரீமான் S. வையாபுரி பிள்ளை, B.A., B.L.,
விலை அணு **0-6-0**

**கலா நிலயம் ஆபீஸ்,** வேளாளர் தெரு, புரசை, சென்னை.



# ANCIENT JAFFNA

MUDALIAR C. RASANAYAGAM C.C.S.

An authentic history of North Ceylon, Particularly of Jaffna based on archeological Epigraphic and linguistic researches is stated here in a connected manner from ancient times up to the occupation of the Island by the European Professor. S. Krishnasamy Iyengar has given an appreciative foreword.

**PRICE Rs. 5-8-0.**

## *KALANILAYAM*

PURASAWALKAM :: VEPERY, MADRAS.



# எமாங்கதத் திளவரசன்

ஸ்ரீமான் T. N. சேஷாசல ஐயர் B.A., B.L.,

எழுதியவோர்

**செந்தமிழ்க்காதை.**

கலா நிலயம், வேளாளர் வீதி, புரசைபாக்கம், சென்னை. விலை ரூ. 1—4—0

## கலாநிலயம் 1930-வது வருடம் 3-வது வால்யூம்.

**தலையங்கங்கள்:**—அறியாமை வேண்டப்படும் 4. சுயநலச்சோதனை 8. விஷயத்திற்கேற்ற விளம்பரம். முயலுக்கு முயலவேண்டா. விளம்பினல் வெட்கக்கேடு. கல்லாதபேர்களே நல்லவர்கள் 3. நாணத்தால் நைவார்திறம். வாலின் நீளம். பெருமையின் பெருமை...முதலிய கட்டுரைகள் ஐம்பது, உலகியலோடு வாழ்க்கையின் தத்துவத்தை விளக்குவன.

**கம்பராமாயணம்:**—(T. N. சேஷாசலம் ஐயர், B. A. B. L.) அயோத்தியா காண்டம் முதலிரண்டு படலங்களின் விளக்க ஆராய்ச்சி அரசியலுக்குரிய அறங்களில் திருவள்ளுவர் வேதவியாசர் முதலானோர்க்கும் கம்பருக்கும் உள்ள வேறுபாடு 25-கட்டுரைகளில் விளக்கப்பட்டுளது. ஸ்ரீமான் சோமசுந்தர பாரதியார் வரைந்துள, "தசரதன் குறையும் கைகேசி நிறையும்" என்னும் நூலிற்கூறிய பொருளும் முடிவும் கம்பருடைய கருத்திற் கொவ்வாதன வென்று 25-கட்டுரைகளில் வாதிக்கப்பட்டிருக்கின்றது.

**குறுந்தொகை:**—(K. இராமரத்நம் ஐயர், B. A.) புத்தகமாய் இப்பொழுது கிடைக்காத இச் சங்கநூற் செய்யுள் நானூறும் விளக்கமான உரையுடன் பதிப்பிக்கப் பெற்றிருக்கின்றது.

**அப்பர்:**—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) அப்பர் அறுபத்துநான்கு கலைகளையறிந்து கையாண்ட பெருமை விளக்கப்பெற்றிருக்கின்றது.

**இலஞ்சிப்பாவை:**—(T. S. நடராஜபிள்ளை, B. A. B. L.) Sir Walter Scott என்பவர் ஆங்கிலத்தில் பாடிய Lady of the Lake என்னும் காவியத்தைத் தழுவி எழுதிய கதை.

**மானத சாத்திரம்:**—(T. P. மீனாக்ஷிசுந்தரம் M. A., B. L.) ஆங்கிலமுறையைத் தழுவி, நடத்தை, உணவு நாட்டம், அழுகை, சிரிப்பு, தன்னெடுப்பு, தன்னொடுக்கம், புணர்ச்சி, இணைவிழைச்சி, விளையாட்டு முதலியவைகளின் தத்துவங்கள் விளக்கப்பட்டுள்ளன.

**தமிழ்ப் பாடம்:**—வில்லிபாரதம் கிருஷ்ணன் தூதுச் சருக்கமும், அஷ்டப்பிரபந்தமும் போதிப்பதுடன், புணரிலக்கணம் முழுவதும் தெற்றென விளக்கப்பெற்றிருக்கின்றது.

**நம்மாழ்வார் வைபவம்:**—(K. இராஜகோபாலா சாரியார், B. A. B. L.) விளக்கமான ஆராய்ச்சியுடன், 2-ம்பத்து 6-ம் தசகம் வரையிலும்.

இவைகளைத் தவிர, ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்த்த கட்டுரைகளும், ஆச்சரிய சூடாமணி என்னும் வடமொழி நாடக மொழிபெயர்ப்பும், சிலப்பதிகாரக் கானல்வரியை அழகுற விளக்கிய 'மாதவி மாதவம்' என்னும் கட்டுரைகளும், தனிப்பாடல்களும், அண்டபுராண ஹாஸ்யப் பாடல்களும்,நாயன்மார் சரித்திர உண்மைபோன்றபல கட்டுரைகளும் நிறைந்துள.

## 1931-வது வருடம் 4-வது வால்யூம்.

**தலையங்கம்:**—அகமே புறம், வாழ்வாங்கு வாழ்பவர் 10. உண்மையில் உழல்வார் திறம் 5. மெய்ம்மையை அலமரச் செய்யலாமோ 4. அருமையினு மருமை 4. மறப்பது முறுதியாமே. நள்ளாள் நகை 4. முதலிய கட்டுரைகள் 50.

**கம்பராமாயணம்:**—(T. N. சேஷாசலம் ஐயர், B. A. B. L.) கைகேசி சூழ்வினைப் படலம் முதல் அயோத்தியாகாண்டம் இறுதியாக 50 கட்டுரைகளில் ஆராயப்பெற்றிருக்கின்றது.

**சூளாமணி:**—(K. இராமரத்நம் ஐயர், B. A.) இதுகாறும் உரை யெழுதப்பெறாத இந்நூல், உரையுடன் பதிப்பிக்க ஆரம்பமாகி இவ்வாண்டில் ஐந்நூறு செய்யுள்கள் வந்துள.

**யாப்பிலக்கணம்:**—உறுப்பியலும், செய்யுளியலில் பாக்களின் இலக்கணமும்.

**அப்பர்:**—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) அப்பர் 64 கலைகளைக் கையாண்ட பெருமை விரிவாக வரையப்பட்டிருக்கின்றது.

**ஆண்டாள்:**—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) ஆண்டாள் பிறப்பு, இளமை, கல்வித்திறம், அனுபவம், யௌவனம், மதம், சித்தாந்தம், முத்தி முதலியவைகளின் உண்மை.

**மானத சாத்திரம்:**—(T. P. மீனாக்ஷிசுந்தரம், M. A. B. L.) புலன்களின் அமைப்பும், உணர்வு முதலியவைகளின் தத்துவமும் விளக்கப்பெற்றுள.

**பிஸாரோ நாடகம்:**—ஆங்கிலப்புலவர் R.B. Sheridan எழுதிய நாடகமொழிபெயர்ப்பு.

**நவராத்திரி நாடகம்:**—(K. N. சுந்தரேசன், B. A. Hons) ஓர் நவீன நாடகம்.

**சிதம்பரதேவர் சரிதம்:**—(Dr. V. S. அருணாசலம் பிள்ளை) முத்தியில் மனம் வைத்து உலகத்தில் விவகரிப்பார் பெருமையை உட்கொண்ட வோர் நாவல்.

**களவியற் காரிகை:**—(S. வையாபுரிப்பிள்ளை, B. A. B. L.) இதுகாறும் அச்சேறாத நூல். அகப்பொருளிலக்கணத்தின் சிறப்பை விளக்கவல்லது.

**கந்தபுராணமும் சங்க நூல்களும்:**—(பண்டிதர், திம்மப்பா ஐயர்) கந்தபுராணத்தைச் சங்கநூல்களோடு ஒப்புநோக்கி ஆராயும் கட்டுரைகள்.

இவை தவிர, மொழிபெயர்ப்புக் கட்டுரைகள், தமிழிரட்டையர், முதலிய கட்டுரைகள் பல.

ஒவ்வொரு வால்யூமிற்கும் விலை வருமாறு:— பைண்ட் செய்யாதது ரூ. **7 8 0**
காலிகோ கில்ட் பைண்ட் ரூ. **8 8 0** ஆப்லெதர் கில்ட் பைண்ட் ரூ. **9 0 0**

இவ்விலையில் தபால் அல்லது இரயில் சார்ஜ் அடங்கவில்லை. இந்தியாவில் உள்ளவர்கள் இரயில்வே பார்ஸல் மூலமாகப் பெற்றுக்கொள்ளலாம். To Pay போட்டு அனுப்புவோம். ஏழெட்டெணுக்களுக்கு மேல் இரயில்வே கட்டணம் ஆகாது. பர்மா, ஸிலோன் இவ்விரண்டு இடங்களுக்கும் ரயிலில் அனுப்பமுடியாதாகையால் விலையுடன் தபால் பார்ஸல் சார்ஜ் ரூ. 2—4—0 சேர்த்தனுப்பவேண்டும். மலேயே, தென்னாப்பிரிக்கா முதலிய நாடுகளில் இருப்பவர் தபால் சார்ஜிக்கு ரூ 3. சேர்த்தனுப்பவேண்டும். இவைகளை வி. பி. யில் அனுப்ப இயலாது. முன்பணம் அனுப்பி எழுதல் வேண்டும்.

# வர்த்தமானம்

ஜேர்மனியில் வேலை யில்லாமை:—ஜெர்மனியில் நாளுக்கு நாள் வேலையில்லாதார் தொகை வளர்ந்து வருவதைக்கண்டு ஜெர்மன் அரசாங்கத்தார் வேலை நேரத்தைக் குறைத்து, அதிகமானவர் வேலைபெறுவதற்கானவோர் ஏற்பாட்டைச் செய்துவருகின்றனர் என்று தெரிகின்றது. இவ்வேற்பாட்டின்படி வாரத்திற்கு 40 மணி நேரமே தொழிற்சாலைகளில் ஒருவன் வேலை செய்யவேண்டிய நேரமாகும். எஞ்சிய 16 மணிநேர வேலைசெய்வதற்கு அதிகமான தொழிலாளர் சேர்த்துக் கொள்ளப்படுவர். இதனால் வேலையில்லாத பலருக்கு வேலையகப்படும். வேலைநேரம் குறைந்ததால் சம்பளக்குறைவு ஒன்றும் ஏற்படாது. இவ்வரசாங்க ஏற்பாட்டை முதலாளிகள் ஏற்றுள்ளார்கள் என்றும் தெரிகின்றது.

***

இங்கிலாந்தில் ஏற்பட்ட லங்காஷையர் தொழிலாளர் வேலைநிறுத்த விஷயமாய் ஒரு சமரச முயற்சி செய்யப்பட்டுவருகின்றதென்றும் சீக்கிரத்தில் வேலை துவக்கப்படும் என்றும் தெரிகின்றது.

***

மாண்டவர் மீண்டார்:—லாகூரில் கோவாலியந்தி என்னுமிடத்தில் ஒருவர் நீண்ட நாட்களாக நோயுற்றிருந்தார். சென்ற வாரம் செவ்வாய்க்கிழமை இரவு அவர் இறந்து போனார். உற்றாரும் உறவினரும் வருந்திக்கொண்டிருந்தனர். பொழுது விடிந்ததும் சவக்கிரியைக்குரிய ஏற்பாடு நடந்தது. பிரேதத்தை அகற்ற முயலுகையில் மாண்டவர் தூங்கி விழித்தவர்போல் எழுந்து உட்கார்ந்தார். வியப்பெய்திய உறவினரைப் பார்த்து, தாம் சுவர்க்கம் சென்றதாகவும், அங்குச் சென்றதும், இங்கு வரவேண்டியவர் வேறொருவர் என்று சுவர்க்க வாசிகள் தன்னைத் திருப்பிவிட்டனர் என்றும் கூறினர். மேலும் இனித்தம்மைத் துறவியாக எஞ்சியுள்ள காலத்தைக் கழிக்குமாறு சுவர்க்கலோகத்தினர் தனக்கு விதித்தனர் என்றும் அவர் தனது மனைவி மக்களுக்குச் சொன்னார் என்று, லாகூர்ச் செய்தி கூறுகின்றது.

***

தற்கொலை:—வெங்கடாசலம் பந்தலு என்பவர், திருவல்லிக்கேணியில் வசித்துக்கொண்டு எம். எல். பரீட்சைக்குப் படித்தனர். அவருக்கு வயது 23 இருக்கும். அவரது குடும்பத்தில் சமீபத்தில் நிகழ்ந்த பல தொல்லைகள் அவரை வருத்திக்கொண்டிருந்தவெனத் தெரிகின்றது. 16-ந்தேதி இரவு அவரும் அவருடன் கூட இருக்கும் நண்பரும் பேசிக்கொண்டிருந்தனர். அப்பொழுது வெங்கடாசலம் பந்தலு என்பார் அமைதியில்லாதிருந்தனராம். அவரது நண்பர், ஏதாவது புத்தகத்தை எடுத்துப் படி என்று கூறித் தூங்கிவிட்டனராம். பிறகு ஏதோ ஒரு சப்தம் கேட்க்க அவர் எழுந்தனராம். அப்பொழுது வெங்கடாசலம் பந்தலு சாகுந்தருணத்திலிருந்தாராம். வயித்திய உதவி அளிக்கப்பட்டது எனினும் பயன்படவில்லை. அவரது சட்டைப்பையிலிருந்து அகப்பட்ட ஒரு துண்டுக் கடிதத்தில், தாம் மாண்டதற்கு எவரும் காரணமில்லை என்றும், தாமே விரும்பிச் செத்ததாகவும் குறிக்கப்பட்டிருந்தது. போலீசார் விசாரித்துத் தற்கொலை என்ற முடிவுக்கு வந்தனர்.

***

இந்தியாவின் நண்பர்கள்:—இந்தியாவினிடம் அனுதாப முடைய சில ஆங்கிலேயர்கள் செப்டம்பர் மாதம் 18-ந்தேதி ஒரு கூட்டங்கூடி, அக்டோபர் மாதம் 22-ந்தேதியன்று இந்திய அனுதாபிகள் 24 மணி நேரம் உபவாசமிருப்பதென்றும், அவ்வுபவாஸத்தினால் மிச்சமாகும் தொகையைக் காந்தியடிகளுக்கு அனுப்பிவிடுவதென்றும் ஒரு தீர்மானம் செய்துள்ளார்கள் என்று லண்டன் செய்தி கூறுகின்றது.

***

மன்னர் சபைக் கூட்டம்:—இனி லண்டனில் மூன்றாம் முறையாக நடக்கவிருக்கும் வட்டமேஜை மஹாநாட்டிற்குப் பிரதிநிதிகளை யனுப்பும் விஷயமாய் ஆலோசனை செய்ய 18-ந்தேதியன்று இந்திய மன்னர் சபைக் கூட்டமொன்று நடந்தது. சுதேச மன்னர்களில் பெரும்பாலோர் வந்திருந்தனர்.

***

பெட்டேலின் சுற்றுப் பிரயாணம்:—ஸ்ரீமான் வி. ஜே. பட்டேல் அமெரிக்காவில் சுற்றுப்பிரயாணம் செய்யும்பொருட்டு லண்டனிலிருந்து பிரயாணமாயுள்ளார் என்றும், அங்குச் சுற்றுப்பிரயாணம் முடிந்ததும் இந்தியா திரும்புவாரென்றும் தெரிகின்றது.

***

டாகூர் பெற்ற செய்தி:— ஸ்காட்லாண்டிலுள்ள ஸர் டேனியல் ஹாமில்டன் என்னும் இந்திய நண்பர் டாக்டர் ரவீந்த்ரநாத் தாகூருக்கு விடுத்துள செய்தி வருமாறு:—

"சென்ற நவம்பர் மாதம் நான் காந்தியடிகளோடு பேசிக்கொண்டிருந்தேன். அப்பொழுது அவர் இந்தியாவிலுள்ள லக்ஷம் கிராமங்களில் ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு வோட் இருக்கவேண்டும் என்றும், அப்பொழுதுதான் அரசாங்கம் சரியான பிரதிநிதித்துவம் உடையதாகும் என்றும் கூறினார். இது விஷயத்தை நான் லார்ட் இர்வினுக்குத் தெரிவித்துள்ளேன் என்பதைக் காந்தியடிகளுக்கு அறிவிப்பீர்களாக. இந்த ஓட்டுக்களைக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக உபயோகிக்க வேண்டும் என்றும் லார்ட் இர்வினுக்கு வற்புறுத்தியுள்ளேன். கூட்டுறவுச் சங்கங்களில்எல்லா வகுப்பினரும் இருப்பதால், வகுப்பு வாதத்திற்கு இடமில்லை. இந்தியாவில் கூட்டுறவுச் சங்க முறை வளர வேண்டும்."

***

வட இந்தியாவிலுள்ள பல விடங்களில் தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களின் கூட்டங்களைப்பற்றிய செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு கூட்டத்திலும் தனித்தொகுதி கண்டிக்கப்பட்டுளது என்று தெரிகின்றது.

***

தேசப் பிரஷ்டம்:—ஸ்ரீ பண்டித மதன்மோகன் மாளவியாவின் குமாரரான கோவிந்த காந்த மாளவியா காசியைவிட்டு அகல வேண்டுமென்றும் மறு உத்தரவு வரையில் அவர் காசிக்குள் நுழையலாகாதென்றும், காசி ஜில்லா மாஜிஸ்டிரேட் ஒரு தேசப்பிரஷ்ட உத்தரவைப் பிறப்பித்திருக்கின்றார் என்று ஒரு விசேஷச் செய்தி கூறுகின்றது.

***

காந்தியடிகள்:— காந்தியடிகள், தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்குத் தனித்தொகுதி கொடுத்து இந்து சமுகம் பிளவுறச் செய்யும் முயற்சியைத் தடுக்கும் பொருட்டு, 20-ந் தேதி 12 மணிக்கு உபவாஸத்தை ஆரம்பித்தார். தனித்தொகுதி முறை அகலும்வரை அடிகள் உண்ணமாட்டார்.


KALANILAYAM
Reg. No. M. 2324.


# — சரஸ்வதி பவுண்டரி —

தந்திவிலாசம்:—காஸ்டிங்.] [Established 1904] [டெலிபோன் நெ:—3002

**96. புளியந் தோப்பு ஹைரோட், பெரம்பூர் பாரக்ஸ், சென்னை.**

எம்மிடம் தேர்ச்சிபெற்ற இந்தியத் தொழிலாளர்களால் தயாரிக்கப்பட்ட ரங்கூன் & அமரிக்கன் டைப், ரைஸ்ஷெல்லர்களும், பாலிஷிங் கோன்களும், மூன்று தினுசாயுள்ள சவரன் டை பிரஸுகளும், வெள்ளிப் பாத்திரங்கள் செய்யும் பிரஸுகளும், பொன் வெள்ளித் தகட்டாலைகளும், கரும்பாலைகளில் கல்கத்தா சைஸ்களும், சாதா மூன்று கால் கரும்பாலைகளும், தண்டவாளச் சுழல்படிகளும், தண்டவாளத் தூண்களும், பலவிதமானத தண்டவாளக் கிராதிகளும், ஆயில் காஸ் மோட்டார் எஞ்சின்களுக்குத் தேவையாயுள்ள ஸிலிண்டர், வாட்டர் ஜாகட்டுக்களும், மற்றத் தனிச் சாமான்களும், எங்கல்பர்க் டைப் நெம்பர் 1, 2, 3, 4, 7 & 8 பால்பேரிங் & சாதா ரைஸ் ஹல்லர்களும், அவைகளுக்குவேண்டிய தனிச் சாமான்களும், தண்டவாள சாதா புல்லிகளும், படபாதிப் புல்லிகளும், கிடைக்கும். ஆயில் காஸ் ஸ்டீம் எஞ்சின்களின் லைனரை ரீபோர் செய்தும் புதிய பிஸ்டன் போட்டும் கொடுக்கப்படும்.



முனிஸிபாலிடிகளுக்குத் தேவையாயுள்ள எலக்ட்ரிக் விளக்குப் போஸ்டுகளும், சாதாரண 1, 2, 3, 4, 5 கிளையுள்ள லாந்தர் போஸ்டுகளும், வாராவதிக்குப் போடக்கூடிய லாந்தர்போஸ்டுகளும் பிராக்கட்டுக்களும், மேனேல் கவர்களும், திம்மிசுகளும், குப்பைவண்டி இன்லெட் அவுட்லெட் வால்வுசெட்டுகளும், பைப்பு பிட்டிங்கிற்கு வேண்டிய தண்டவாளக் குழாய்களும், கப்பிளிங் பைப் டீ, பிரான்ச் ரெடியூஸர்களும், தோட்டத்தில் போடக்கூடிய தண்டவாளப் பெஞ்சு கால்களும, பள்ளிக்கூடத்துக்கு வேண்டிய சாதா மடிப்புப் பெஞ்சுகளும் கிடைக்கும்.

மைல்ஸ்டீல் தகட்டினால் செய்த பாயிலர் சிம்னிகள், டாங்குகள், நெல் அவிக்கும் பாய்லர்கள், டிரஸ்கள், வாராவதிகள் இன்னும் பலவிதமான ரிவிட்டு வேலைகள் யாவும் நேர்த்தியாய்த் தயாரித்துக் கொடுக்கின்றோம்,

சார்ஜிகள் மிகவும் சரசம். குறித்த காலங் தவறுவதில்லை. கேட்லாக்கிற்கு எழுதவும்.

## :: அமிர்த சாகரம் ::

தேக பலத்தையும், ஞாபகவிருத்தியையும், பும்ஸத்வத்தையும், கொடுப்பதில் எங்கள்

அமிர்தார்ணவ லேகியம்

அமிர்தசாகரம் போன்றது. மேலும், நீடித்த தலைவலி, மண்டை இடி, மார்பு வலி, தேகச் சூடு முதலிய வியாதிகளைக் கரஸ்தமாகக் கண்டிக்கும். 20-தோலா லேகியம் கொண்ட டப்பி 1-க்கு ரூபா 2.

இனாம்! ஆரோக்கிய கிரந்தம் இனாம்!

கேட்போருக்கு இனாமாகவும், தபாற்செல வில்லாமலும் அனுப்பப்படும்.

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

## கற்பக மலர் (சிறு கதைகள்)

(ஆசிரியர் - சகோதரி வி. பாலம்மாள்)

மலர் 1 - விருந்தில் விலங்கு - விலை அணா 3.
மலர் 2 - அவள் இஷ்டம் - விலை அணா 3.
ஏழணா ஸ்டாம்புக்கு 2-புத்தகங்கள் அனுப்பப்படும்.
ஸ்ரீமதீ பிரசுராலயம், மயிலாப்பூர், சென்னை.

ஆ. ஸி. கஸ்தூரிரங்கய்யர் B.A., L.T.,
இயற்றிய

## :: பாகவத வினா விடை ::

சிறந்த கிளேஸ் காகிதத்தில் நன்கு அச்சிடப்பட்ட 550 பக்கங்களும் 20 சித்திரப்படங்களும் கொண்டது. விரிவான அட்டவணையும், கிருஷ்ணலீலை, லீலா சுகர் கதை போன்ற பலமுக்கியமான விடயங்களின் மெய்க் கருத்தை விளக்கும் அநுபந்தங்கள் அடங்கியது. ரூ. 2.

பாலவிநோதினி ஆபீஸ், 323, தண்டையாரப்பேட்டை
வண்ணாரப்பேட்டை போஸ்ட், மதராஸ்

## NATIONAL INSURANCE COMPANY, LIMITED.

**Head Office :**
**NATIONAL INSURANCE BUILDING,**
**7, Council House Street, Calcutta.**

| | |
|---|---|
| New Policies Issued in 1931 for over ... ... | Rs. 1,32,33,000 |
| Showing an increase over the New Business figure for 1930 of ... ... | 16.54 % |
| Claims paid up to end of 1931 over ... ... | Rs. 90,00,000 |
| Invested Funds amount to over | Rs. 1,75,00,000 |

LOW RATES LIBERAL CONDITIONS
NEW TABLES NEW BENEFITS

For particulars & Agencies please write to:—

R. G. DAS & Co., *Managers.* OR The Branch Secretary, Madras Branch, 113, Armenian Street, Madras.

**FIRE & ACCIDENT RISKS**
**covered by**
**NATIONAL FIRE**
AND
**GENERAL INSURANCE COMPANY Ltd.,**
**NATIONAL INSURANCE BUILDING,**
**7, Council House Street, Calcutta.**

The Branch Secretary, Madras Branch, 113, Armenian Street, Madras. OR R. G. DAS & Co., *Managers.*


Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)